பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 02 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 25 திங்கட்கிழமை 11.12.2017 கதிர் 36

## உதயசூரியன் கூட்டில் ஈரோஸும் இணைவு

யாழ்ப்பாணம்,டிசெ.11
வடக்கு – கிழக்கில் உள்ளூ ராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற் காக உதயசூரியன் சின்னத்தில் உருவாகியுள்ள கூட்டணியில் ஈரோஸ் ஜனநாயக முன்னணியும் இணைந்துள்ளதாகக் கட்சியின் பொதுச் செயலாளர் ராஜேந்திரன் தெரிவித்தார். பக்கம் 18

# காணாமற்போனோரின் விவரங்களை வெளியிடு

## மனித உரிமைகள் தினமான நேற்று யாழில் கவனவீர்ப்புப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)



யாழ்ப்பாணம், டிசெம்பர் 11
காணாமற்போனோர் தொடர்பான விவ ரங்களை விரைவாக வெளியிடக் கோரி வடக்கின் பல பாகங்களிலும் கடந்த 300 நாள்களாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் உறவுகள், உலக மனித உரிமைகள் தினமான நேற்று யாழ்ப் பாணம் நகரில் கவனவீர்ப்புப் பேரணியை முன்னெடுத்தனர். பக்கம் 18



## 7 கட்சிகள், 1 சுயேச்சை யாழில் கட்டுப்பணம்

யாழ்ப்பாணம், டிசெ.11
உள்ளூராட்சித் தேர்த லில் போட்டியிடுவதற் காக யாழ்ப்பாணத்தில் இதுவரை ஏழு கட்சிகளும், ஒரு சுயேச்சைக் குழுவும் கட்டுப்பணத்தைச் செலுத் தியுள்ளன என யாழ். மாவட்ட செயலகத் தேர்தல் அலுவலகம் தெரிவித்துள் ளது.

ஈழமக்கள் ஜனநாய கக் கட்சி (ஈ.பி.டி.பி), அகில இலங்கைத் தமிழ்க் காங் கிரஸ் ஆகியன 17 சபை களுக்கும், சிறிலங்கா பொதுஜனபெரமுன, இலங் கைத் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட் டணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன சாவகச்சேரி பக்கம் 18

## 93 சபைகளுக்கு இன்று முதல் வேட்பு மனுக்கள்

கொழும்பு, டிசெ.11
93 உள்ளூராட்சிச் சபைகளுக்கு வேட்புமனுத் தாக்கல் இன்று ஆரம்ப மாகவுள்ளது. முதல் கட்ட மாக வேட்புமனுக்கள் கோரப்பட்ட 93 உள்ளூ ராட்சி சபைகளுக்கே இவ் வாறு வேட்புமனுத்தாக்கல் ஆரம்பமாகிறது.

இங்கு எதிர்வரும் 14ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வேட்புமனுக் களைத் தாக்கல் செய்ய முடியும் என்று தேர்தல்கள் செயலகம் அறிவித் துள்ளது. பக்கம் 18

# தீர்வு கிட்டும் வரை ஆட்சி அதிகாரத்தை ஏற்கவேமாட்டோம்

## வவுனியாவில் நேற்று சுமந்திரன் உறுதி



வவுனியா, டிசெ.11
அரசமைப்பின் ஊடாக அதிகாரங்கள் மக்களுக்குக் கிடைக்கும் வரை மத்திய அரசுடன் ஆட்சி அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளமாட்டோம். அதிகாரங்கள் மக்களுக் கானவையே தவிர, அரசியல்வாதிகளுக்கு உரியவை அல்ல.

– இவ்வாறு கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். பக்கம் 18

## யாழ்ப்பாணத்திலிருந்து விடை பெறவுள்ளார் நீதிபதி இளஞ்செழியன்

### மட்டக்களப்பு செல்ல விருப்பம்



யாழ்ப்பாணம், டிசெ.11
“யாழ்ப்பாணத்துக்கு நான் வருகைதந்த நோக்கம் நிறை வேறிவிட்டது. அது அனைவருக் கும் தெரியும். மட்டக்களப்புக்குச் சென்று அங்குள்ள மக்களுக்குச் சேவையாற்ற விரும்புகின்றேன். அதற்கான மாற்றல் விரைவில் எனக்கு வரும்.”

இவ்வாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தெரிவித்தார். பக்கம் 18

## தேசிய அரசு உடன்பாட்டை நீடிக்க இரு தரப்பும் முயற்சி

### சு.க. அமைச்சர்கள் சிலர் தீவிர பேச்சு

கொழும்பு,டிசெ.11
ஐக்கிய தேசியக் கட்சிக் கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட தேசிய அர சுக்கான உடன்படிக் கையை எதிர்வரும் 31 ஆம் திகதிக்குப் பின்னரும் நீடிப்பதற்கு முயற்சிகள் நடப்பதாக இரு கட்சி களின் உட்தரப்புத் தகவல் கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மைத்திரி பக்கம் 18

## நாட்டைப் பிரிப்பதால் நல்லிணக்கம் ஏற்படாது

### விரோதமே அதிகரிக்கும் என்கிறார் மஹிந்த



கொழும்பு, டிசெ.11
இலங்கையைத் துண்டுதுண் டாகப் பிரிப்பதால் நல்லிணக்கம் ஒருபோதுமே ஏற்படாது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இதனால் விரோதமே மென் மேலும் அதிகரிக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் காலக் கட்சித் தாவல் கள் அரங்கேறிவரும் நிலையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் ஐக்கிய தேசிய கட்சி, மக்கள் விடுதலை பக்கம் 18

## இனங்களின் பெயர்களில் கட்சிகள் இனி வேண்டாம்

கொழும்பு, டிசெ.11
இனவாத முகத்துடன் அரசியலில் ஈடுபடுவதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என உள்ளூ ராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரி வித்தார்.

இனங்களின் பெயர் களில் பக்கம் 18

# கூட்டமைப்பு பிளவுபட்டால் ரணிலின் திட்டம் பலிக்காது

## அதற்காகவே ஒற்றுமையை அவர் வலியுறுத்துகிறார் என்கிறார் சுரேஷ்



யாழ்ப்பாணம், டிசெ.11
தேர்தலின் பின்னர் தேசிய அரசில் உடைவுகள் ஏற்பட்டு ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சிய மைக்க முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன. அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு தேவை. இதனால்தான் கூட்டமைப்பின் ஒற்றுமை குறித்து ரணில் விக்கிரம சிங்க தற்போது அக்கறை செலுத்துகிறார் என ஈ.பி. ஆர்.எல். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித் தார்.

யாழ். ஊடக அமையத் தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பக்கம் 18

## புதிய முஸ்லிம் கூட்டின் தலைவராக ஹசன் அலி

கொழும்பு, டிசெ.11
வர்த்தக மற்றும் கைத் தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கி ரஸ் மற்றும் எம்.ரி.ஹசன் அலி, பசீர் சேகுதாவூத் ஆகியோர் அங்கம் வகிக் கும் ஐக்கிய சமாதான கூட் மைப்பு பக்கம் 18

# வட மாகாண முன்பள்ளி ஆசிரியருக்கு 2018 இல் 2,000 ரூபா சம்பள உயர்வு

## வட மாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.11

வடக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அடுத்த ஆண்டிலிருந்து 2000 ரூபா வேதனம் அதிகரிக்கப்படும் என மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். ஏழாலை திவ்யா முன்பள்ளியின் வருடாந்த கலை விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாணவர்களில் முன்பள்ளி மாணவர்களுக்கு கற்பிப்பதே அதிக சிரமமான விடயம். ஆனாலும் எங்களுடைய ஆசிரியர்கள் மிகக் குறைந்த வேதனத்தைப் பெற்றுக் கொண்டு



பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் சேவை மனப்பாண்மையோடு முன்பள்ளி சிறார்களுக்கு கற்பித்து வருகின்றமையானது போற்றுதலுக்குரியதாகும்.

முன்பள்ளி சிறார்கள் நாற்றுக்களைப் போன்றவர்கள். அந்த நாற்றுக்களை பயன்தரக்கூடிய மரங்களாக உருவாக்குகின்ற உயரிய பணியில் ஈடுபட்டிருக்கும் உங்கள் ஒவ்வொரு



வரின் சேவையும் மகத்தானது.

உண்மையில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வடக்கு மாகாண சபையால் வழங்கப்படுகின்ற வேதனம் என்பது மிக சொற்பமானதே.

அவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான பொருளாதாரமாக அவை நிச்சயம் இருக்க மாட்டா என்பதை நாம் அறிவோம்.

இருப்பினும் மாகாண சபையால் பெரியளவில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வேதனத்தை உயர்த்த முடியாத நிதி நெருக்கடியில் தற்போது வடக்கு மாகாணசபை உள்ளது.

உங்களுக்கான வேதனத்தை அதிகரிப்பதற்கு மத்திய அரசு மாகாணத்திற்கு பணத்தை ஒதுக்குவதில்லை.

இருப்பினும் உங்களது உயரிய சேவையைக்கருத்தில் கொண்டு அடுத்த ஆண்டு (2018) தொடக்கம் 2000 ரூபா வேதன அதிகரிப்பை மேற்கொள்ள உள்ளோம்.

இதற்காக வடக்கு மாகாண சபையின் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் கஜதீபன், அயற் பாடசாலை அதிபர்கள், முன்பள்ளி சிறார்களின் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்துக்கு பலத்த பாதுகாப்பு!



கொழும்பு, டிசெ. 11

கொழும்பில் அமைந்துள்ள அமெரிக்க தூதரகத்துக்குப் பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் புனித ஜெருசலம் இஸ்ரேலின் தலைநகர் என அறிவித்தமையை அடுத்து, உலகம் முழுவதும் அமெரிக்காவுக்கு எதிராக எதிர்ப்பு வலுத்துள்ளது.

அமெரிக்காவுக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையிலேயே, கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

## கள்ளப்பாடு வடக்கு முன்பள்ளி மாணவரின் கௌரவிப்பு விழா

முல்லைத்தீவு, டிசெ. 11

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேசத்தில் உள்ள கள்ளப்பாடு வடக்கு முன்பள்ளியின் மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது.

முன்பள்ளிச் சிறுவர்களின் நிகழ்வுகள் பலவற்றை உள்ளடக்கியதாக நடைபெற்ற இந் நிகழ்வில் முதன்மை விருந் தினராக வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்துகொண்டார்.

அடுத்த ஆண்டில் ஆரம்ப பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு உள்வாங்கப்படவிருக்கும் மாணவர்களுக்கான முன்பள்ளிக் கற்கையின் நிறைவு நிகழ்வானது முன்பள்ளிகளால் கௌரவிப்பு நிகழ்வாக முன்னெடுக்கப்பட்டன.

அந்த வகையில் கள்ளப்பாடு வடக்கு முன்பள்ளியின் கௌர



விப்பு நிகழ்வு கள்ளப்பாடு அ.த.க.பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

முன்பள்ளியின் தலைமை ஆசிரியை திருமதி நடேசினி இரவிக்குமார் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

இதேவேளை, முன்பள்ளிகளின் உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் இணைப்பாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

(க)

## பிள்ளைகளுக்கான நீதி கிடைக்கும் வரையில் நாம் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை

வவுனியா , டிசெ. 11

சர்வதேச மனித உரிமைகள் தினமாகிய நேற்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளது கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று வவுனியாவில் இடம் பெற்றுள்ளது.

290 ஆவது நாளாக வவுனியா தபால் நிலையத்திற்கு அருகில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், நேற்று



மதியம் இக்கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் தமது பிள்ளைகளைக் காணாது தாம் தவித்துவரும் நிலையில் இதுதானா இலங்கையின் மனித உரிமை என கேள்வி எழுப்பியிருந்தனர்.

மேலும், உரிய தரப்பினரிடமிருந்து தமது பிள்ளைகளுக்கான நீதி கிடைக்கும் வரையில் தமது போராட்டத்தைக்கைவிடப் போவதில்லை எனவும் அவர்கள் இதன்போது தெரிவித்திருந்தனர்.

இதேவேளை, இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின்போதும் அதன் பின்னரான காலத்திலும் வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்களிலிருந்து ஏராளமான இளைஞர் யுவதிகள் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டிருந்த நிலையில் தொடர்ந்தும் உறவினர்களால் தேடப்பட்டு வருகின்றனர்.

இதன் ஓர் அங்கமாகவே அவர்களது உறவுகளால் பல்வேறு பகுதிகளிலும் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(க)

# ஊடகங்கள் மீதான அச்சுறுத்தல் நல்லாட்சியிலும் தொடர்கிறது

## யாழ். ஊடக அமையம் கண்டனம்

தமிழர் தாயகத்தில் மீண்டும் மீண்டும் ஊடகவியலாளர்களை இலக்கு வைத்து கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறைகள் மற்றும் தாக்குதல்கள் ஊடக சுதந்திரத்தை மேம்படுத்த உதவப்போவதில்லை. நல்லாட்சி அரசிலும் அவை தொடர்கின்றன.

இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ்.ஊடக அமையம்.

கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவு தண்ணீர்முறிப்புப் பகுதியில் சிங்கள மயமாக்கல் தொடர்பில் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்கள் இராணுவம், பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் கண்டனம் தெரிவித்து யாழ்.ஊடக அமையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

முல்லைத்தீவு சிங்களமயமாவது தொடர்பில் செய்தி மற்றும் ஆவணப்படுத்தல் செய்வதற்கு ஊடகவியலாளர்கள் சென்றிருந்தனர். இதன்போது அவர்கள் தண்ணீர்முறிப்பு பகுதிக்கும் சென்றிருந்தனர்.

அவர்கள் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்ட வேளை ஊடகவியலாளர்கள் எனத் தம்மை அடையாளப்படுத்தியுள்ளனர். இருப்பினும், அவர்களை அங்கு தடுத்து வைத்து இராணுவம் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளது.

திட்டமிட்ட வகையில் தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் பேணப்படும் படைமுகாம்கள் குடியேற்றத் திட்டங்களுக்கானவை என்பதும் அதனை ஊடகங்கள் வெளிக்கொணரக்கூடாதென்பதை இந்த அரசு விரும்புகின்றதென்பதும் மீண்டுமொரு முறை உறுதியாகியுள்ளது.

இதேவேளை, சாவகச்சேரிப் பகுதியில் வைத்து இலங்கை ஒலிரப்பு கூட்டுத்தாபன ஊடகவியலாளர் எஸ்.மனோகரனும், பொன்னாலைப்பகுதியில்வைத்து சிரேஷ்ட ஊடக செயற்பாட்டாளர் ந.பொன்ராசாவும் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

கிளிநொச்சியைச்சேர்ந்த மற்றொரு ஊடகவியலாளரான சு.பாஸ்கரன் மீதும் மாங்குளம் பகுதியில் வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.மற்றொரு சுயாதீன ஊடகவியலாளரான க.ரவிசாந்த் தனது பணியிடம் சார்ந்து அச்சுறுத்தப்பட்டதாக அறிவித்துள்ளார்.

ஒருபுறம் ஊடகவியலாளர்கள் தொழில் சார்ந்து பாதுகாப்பற்ற சூழ்நிலையில் பணியாற்ற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். மறுபுறம் அவர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்களின் பின்னால் உள்ளவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாத போக்கே காணப்படுகின்றது.

ஏற்கனவே யுத்த காலத்தில் தமிழர் தாயகத்தில் 39 ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் கொல்லப்பட்டோ காணாமல் ஆக்கப்பட்டோ உள்ளனர். இன்றுவரை அவர்களுக்கு நீதி வழங்க ஆட்சியிலுள்ளோர் தயாராகவில்லை.

இந்நிலையில் ஊடக சுதந்திரம் திரும்பிவிட்டதாகக் காண்பிக்க அரசும் அதன் முகவர்களும் பாடுபடுகின்றனர்.

மீண்டும் தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்குதல்களை யாழ்.ஊடக அமையம் மிகவன்மையாகக் கண்டிக்கின்றது.

இலங்கை அரசு வெறுமனே சொல்லிக்கொண்டிருக்கும் ஊடக சுதந்திரம் தொடர்ந்தும் பெயரளவிலேயே இருக்கப்போகின்றதாவென்ற கேள்வியையும் அமையம் முன்வைக்க விரும்புகின்றது - என்றுள்ளது. (ஐ -7)

# தவறான முடிவெடுத்து இளம்பெண் உயிரிழப்பு

நெடுங்கேணி பழம்பாசிப் பகுதியில் யுவதி ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர் துறந்துள்ளார்.

நேற்றுக் காலை குறித்த யுவதி தனது வீட்டில் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

பழம்பாசியைச் சேர்ந்த யோகானந்தராசா கம்சிகா (வயது - 20) என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்தவராவார்

சம்பவம் அறிந்து குறித்த பகுதிக்கு விரைந்த ஒட்டுசுட்டான் பொலிஸார் சடலத்தை மீட்டு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

மருத்துவமனையில் சட்ட மருத்துவரின் மரண விசாரணை அறிக்கையின் பின்னர் நேற்று மாலை சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ)

# பதுளையில் மண்சரிவு அபாயம்; 120 குடும்பங்கள் வெளியேற்றம்

கொழும்பு, டிசெ. 11

மண்சரிவு அபாயம் காரணமாக பதுளை மாவட்டத்தில் வெலிமடை மற்றும் ஹல்துமுல்ல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட ஒஹிய, உடவேரிய, லைபோன் ஆகிய தோட்டங்களில் இருந்த தொழிலாளர் குடும்பங்கள் குடியிருப்புக்களில் இருந்து அவசரமாக வெளியேற்றப்பட்டுள்ளன.

அண்மையில் பெய்த கடும் மழையை அடுத்து, ஏற்பட்ட குறித்த அபாயம் காரணமாகவே மேற்படி தோட்டங்களில் வசித்த 120 குடும்பங்களைச் சேர்ந்த 400க்கும் மேற்பட்ட மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். இவர்கள் உடவேரிய தோட்டத்தில் கைவிடப்பட்ட தேயிலைத் தொழிற்சாலையொன்றில் தங்க வைக்கப்பட்ட போதிலும், அங்கு எவ்வித வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

மேலும், கடந்த ஒரு வார காலமாகக் குறித்த தேயிலைத் தொழிற்சாலையிலும் மேலும் சிலர் பாடசாலையிலும் மற்றும் தோட்ட ஊழியர் வீட்டிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 50 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தேயிலைத் தொழிற்சாலையில் தங்கவைக்கப்பட்டுள்ள போதிலும், தொழிற்சாலைக்குள்ளேயே கூடாரங்களை அமைத்து எவ்வித அடிப்படை வசதியுமற்ற நிலையில் வாழ வேண்டிய இக்கட்டான சூழ்நிலையை எதிர்நோக்கியுள்ளனர்.

இப்பகுதியைச் சேர்ந்த அரசியல் தலைமைகள் இதற்கு உரிய நடவடிக்கை எடுத்து தம்மைப் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க வேண்டும் என்பதோடு, அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# யாழ். பொது நூலகத்தில் நேற்று தமிழ் - முஸ்லிம் ஐக்கிய மாநாடு




'வடக்கின் மக்களாக எழுவோம்' எனும் தொனிப்பொருளில் தமிழ் – முஸ்லிம் ஐக்கிய மாநாடு யாழ்ப்பாணத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இலங்கை தமிழ் – முஸ்லிம் ஆதரவாளர் வட்டத்தின் ஏற்பாட்டில் யாழ்.பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று மாலை இந்த மாநாடு நடைபெற்றது.

இதன்போது, இரு சமூகங்களுக்கும் இடையிலான ஒற்றுமையைப் பலப்படுத்துதல் மற்றும் புரிந்துணர்வு தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்த மாநாட்டின் பிரதம விருந்தினராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்துகொண்டார். அத்துடன், வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சின்னத்துரை தவராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான அஸ்மின் அயூப், ஆர்னோல்ட், பசுபதிப்பிள்ளை, வடக்கு மாகாண முன்னாள் கல்வியமைச்சர் த.குருகுலராசா மற்றும் முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள், முஸ்லிம் மக்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர். (ஐ)

# வடக்கு சுகாதாரத் தொண்டர்கள் டக்ளஸ் எம்.பியுடன் நேற்றுப் பேச்சு



வடமாகாண சுகாதாரத் தொண்டர்கள் மற்றும் மாகாண நீர் வடிகாலமைப்புச் சபையின் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் ஆகியோர் தமது நிரந்தர நியமனம் தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது வடக்கு மாகாணத்தில் யுத்த காலத்திலும் யுத்தம் நிறைவடைந்த பின்னரான காலங்களிலும் வைத்திய சாலைகளில் சுகாதாரத் தொண்டர்களாகப் பணிபுரிந்துவரும் தம்மை, நிரந்தர நியமனத்தின் கீழ் உள்வாங்காமையானது தமக்கு மிகுந்த வேதனையை தருவதாகச் சுகாதாரத் தொண்டர்கள் டக்ளஸ் தேவானந்தாவிடம் சுட்டிக்காட்டினர்.

இதேபோன்று நீண்டகாலமாக வட மாகாணத்தில் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கீழ் பணியுரியும் தாம் நிரந்தர நியமனத்திற்குள் இதுவரை உள் வாங்கப்படவில்லை என ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிவரும் ஊழியர்கள் தெரிவித்தனர்

இரு தரப்பினரது கோரிக்கைகளையும் அறிந்துகொண்ட டக்ளஸ் தேவானந்தா, இது விடயம் தொடர்பாகச் துறை சார்ந்தோரிடம் கலந்துரையாடி அதற்கான தீர்வுகளைப் பெற்றுத்தருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (ஐ)

# மனித உரிமை காவலர்களுக்கு நேற்று அஞ்சலி

மனித உரிமை செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த நிலையில் கொலை செய்யப்பட்டவர்கள், சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று நினைவு கூரப்பட்டனர்.

கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில், நேற்று இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அதன் பின்னர் உரையாற்றிய அருட்தந்தை துரைரட்ணம், இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்துக் கருத்துத் தெரிவித்தார். அத்தோடு, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் உள்ளிட்டோரையும் தமதுரையில் நினைவு கூர்ந்தார்.

இவர்களைப் போன்று மனித உரிமைகளை காப்பாற்றுகின்றவர்களாகவும் மதங்களைப் பின்பற்றி, மதங்கள் காட்டுகின்ற மனிதநேய அடிப்படைகளை எதிர்காலச் சந்ததிக்கு கற்றுக் கொடுத்து, மனித உரிமைகள் மதிக்கப்படுகின்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## காணாமல்போனோர் விவகாரத்துக்கு நீதி கிடைக்கப் போவதே இல்லையா?

சர்வதேசமனித உரிமைகள் தினமான நேற்று யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் பேரணி ஒன்று நடத்தப்பட்டிருக்கின்றது.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் பலநூறு பேர் ஒன்று சேர்ந்து இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தியிருக்கின்றார்கள்.

காணாமலாக்கப்பட்ட தமது உறவுகள் குறித்த விவரங்களை வெளியிடக் கோரி கடந்த முந்நூறு நாள்களுக்கும் மேலாக, வடக்கின் பல பாகங்களிலும் தொடர் போராட்டங்களை மேற்கொண்டு வரும் தமிழ் மக்களே சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று சர்வதேசத்துக்கும் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தும் விதமாக இந்தக் கவனவீர்ப்பு நிகழ்வை நடத்தியிருக்கின்றனர்.

இப்படிப் போராட்டம் நடத்தும் மக்களின் அவலம் தொடர்கதையாக நீள்கிறது.

யுத்தம் முடிந்து எட்டு ஆண்டுகள் கழிந்துவிட்டன. ஆனால் காணாமலாக்கப்பட்ட நமது உறவுகளின் நிலைமை பற்றிய விடயம் கிணற்றில் போட்ட கல்லாக அமுங்கிக் கிடக்கின்றது.

யுத்தத்தின் பின்னரான, புரிந்துணர்வு நடவடிக்கையைக் கட்டியெழுப்பும் விவகாரத்திலாயினும் சரி -

அதன் ஓர் அம்சமான நிலைமாறு கால நீதி நடவடிக்கைகளினாயினும் சரி -

காணாமலாக்கப்பட்டோர் விடயத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு தீர்வு காணப்பட வேண்டும் என்பது தொடர்ந்து வலியுறுத்தப்பட்டே வந்துள்ளது.

வலிந்து காணாமலாக்கப்பட்ட பல்லாயிரம் மக்களின் நிலைமையைக் கண்டறியாமல் -

அப்படிக் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் அவர்கள் குறித்து காத்து, ஏங்கித் தவித்திருந்து அல்லற்படுகையில் -

தமது உறவுகளை சட்டவிரோதமான முறையில் காணாமலாக்கியோர் எனத் தாம் சந்தேகிப்போர் அது குறித்து விசாரிக்கப்படாமலும், சட்டத்தின் முன் நிறுத்தப்படாமலும், தண்டிக்கப்படாமலும் சுதந்திரமாக - நாட்டை மீட்ட தேசிய வீரர்கள் என்ற பெருமையுடன் - இந்த நாட்டில் சுயாதீனமாக வாழ்கின்றார்கள் என்ற மன அழுத்தம் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் நெஞ்சை வாட்டி வதைக்குகையில் -

இந்த நாட்டில் புரிந்துணர்வு, நல்லிணக்கம், அதனடிப்படையில் தேசிய இனப்பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு என்று கூறுவது வெறும் அபத்தமின்றி வேறில்லை.

இலங்கை தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கையும் சேர்ந்து நிறைவேற்றிய தீர்மானத்திலும், இரண்டு வருடங்கள் கழித்துப் பின்னர் மேலும் இரண்டு வருடங்கள் கால அவகாசம் வழங்கி நிறைவேற்றிய தீர்மானத்திலும், காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் உரிய விசாரணைகள், நடவடிக்கைகள், தீர்வுகள் குறித்து வலியுறுத்தப்பட்டே இருந்தது.

இது தொடர்பில் தொடர்ந்து வந்த சர்வதேச அழுத்தம் காரணமாக காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான ஒரு சட்டமும், அது தொடர்பான ஆணைக்குழு ஒன்றை ஸ்தாபிப்பதற்கான சட்டமும் இலங்கைநாடாளுமன்றத்தில்கொண்டுவந்துநிறைவேற்றப்பட்டன.

ஆனால் அதற்கு அப்பால் எதுவும் நடக்கவில்லை. - காணாமல் போனோர் பற்றிய விசாரணை ஆணைக்குழுவில் இடம்பெற விரும்புவோரின் விண்ணப்பங்களைக் கோரும் விளம்பரங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டமையோடு விடயம் அடங்கிவிட்டது. இது தொடர்பாக நிறைவேற்றப்பட்ட இரண்டு சட்டங்களும் வெறும் ஏட்டுச் சுரக்காய் என்றளவில் செயலிழந்து கிடக்கின்றன.

இந்தப் பின்புலத்திலேயே காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று யாழ்ப்பாணத்தில் இந்தக் கவனவீர்ப்புப் பேரணியை நடத்தியிருக்கின்றார்கள்.

அவர்களின் இந்தப் போராட்டமும் அவர்கள் எதிரொலித்த விடயங்களும் நமது அரசுத் தலைமையின் கவனத்தை ஈர்க்குமா என்பது கேள்விக்குறியே. அவை, 'செவிடன் காதில் ஊதிய சங்கு' போன்று - எருமை மாட்டில் பெய்த மழை போன்று - அவமாகிப் போகும் சூழ்நிலையே தொடர்ந்து காணப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் பல தடவைகள் ஜனாதிபதிவரை பலரையும் சந்தித்துத் தங்களது ஆதங்கத்தை - அவலத்தை - எடுத்துரைத்துவிட்டார்கள். நமது அரசியல் தலைவர்கள் சர்வதேச மட்டம் வரை இந்த விடயத்தை - எடுத்துச் சென்று கவனத்தை ஈர்க்கும் பல நடவடிக்கைகளை எடுத்துக் களைத்துப் போய்விட்டார்கள். எதுவும் நடக்குமா என்ற நம்பிக்கையும் இல்லை.

இனி என்ன? தேசிய ரீதியில் உள்ளூராட்சித் தேர்தல் பரபரப்பு என்ற வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் ஏற்பட்டுள்ளது. அடுத்த இரண்டரை மாதங்களுக்கு இவ்விடயத்தில் ஏதும் நகராது என்பது நிச்சயம்.

தொலைத்த தமது உறவுகளைத் தேடும் நமது மக்கள் பல்லாயிரம் பேருக்கு நியாயமான பதில் கிடைக்கமாட்டாதா? அவர்களுக்கு நீதி கிட்டாதா? அது அவர்களுக்கு எட்டாக்கனியாகவே இருக்கப் போகின்றதா?

# இணக்கப்பாடு ஏற்படாவிடில் த.மு.கூட்டணி தனித்துப் போட்டி!



## அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 11

தமிழ் முற்போக்குக் கூட்டணி நுவரெலியா, கண்டி, இரத்தினபுரி, மாத்தளை, கேகாலை, பதுளை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாக போட்டியிடுவதற்கான பேச்சுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த பேச்சுவார்த்தையில் கூட்டணிக்கு ஓர் இணக்கப்பாடு இல்லையென்றால் தனித்து போட்டியிட தமிழ் முற்போக்குக் கூட்டணி தயாராகவுள்ளது. எமக்குச் சின்னம் முக்கியம் இல்லை. எண்ணம் தான் முக்கியம் என்று தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மஸ்கெலியாநகரில் நேற்றுக் காலை இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காகச் சென்ற போது ஊடக வியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவோம். அது மட்டுமில்லாமல் தனித்துப் போட்டியிடும் பகுதிகளில் முற்போக்கு சிங்களகட்சிகளையும், முற்போக்கு முஸ்லிம் கட்சியினரையும் இணைத்துப் போட்டியிட நாம் தயாராகவுள்ளோம்.

அத்தோடு 1987 ஆம் ஆண்டு இந்த நாட்டில் சிங்கள மொழி மட்டும் என்ற சட்டம் மாற்றப்பட்டு தமிழ் மொழியும் ஆட்சி மொழியாக உள்வாங்கப்பட்டது.

இப்பொழுது 30 வருட காலமாகிவிட்டது. இந்த பிரச்சினையைத் தீர்ப்பதில் ஏனையவர்கள் தூங்கிக்கொண்டு இருந்தார்களா என்று கேட்க விரும்புகின்றேன். நான் இப்பொழுது இந்த விடயத்தை பொறுப்பேற்றுள்ளேன்.

எனக்குத் தமிழ், சிங்களம், ஆங்கிலம் மூன்று மொழிகளும் தெரியும். இது இப்பொழுது பேசும் பொருளாக மாறியுள்ளது. இது எனக்கு வெற்றியளித்துள்ளது. இந்தப் பிரச்சினையை வெகுவிரைவில் தீர்க்க முடியும். 30 வருட பிரச்சினையை 30 நாள்களில் தீர்க்க முடியாது. இது முட்டாள்தனமான விடயமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகக் கடந்த பல வருடகாலமாக பல அரசுகளுக்கு ஆதரவளித்துள்ளது. இந்திய அரசுக்கும் ஆதரவளித்துள்ளது. எனினும், இனப்பிரச்சினை தீர்ந்துவிட்டதா என்று கேட்க விரும்புகின்றேன். அவர்களுக்கு ஒரு சட்டம். எனக்கு ஒரு சட்டமா? இனப்பிரச்சினைக்குக் காரணம் மொழிப் பிரச்சினை தான் என்று நான் சொல்லவில்லை. மொழிப் பிரச்சினை தீர்க்கப்பட்டு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டால் மாத்திரமே இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். அதை நாம் பெறுவோம். அதற்கு முன்னோடியாக மொழிப் பிரச்சினை தீர்க்கப்படும்.

அதேவேளையில், அனர்த்தம் விவரம் தமிழ் மொழி மூல அறிக்கைகள் வழங்காது தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடம் நேரடியாக முறையிட்டுள்ளேன். அந்தப் பிரச்சினை தற்பொழுது தீர்க்கப்பட்டுள்ளது. இப்பொழுது தமிழிலும் அறிக்கைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

வடக்கில் குடியமர்த்தப்பட்ட மலையக மக்களுக்கு அங்கு பிரச்சினைகள் இருக்கின்றன. இந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தமிழ் முற்போக்குக் கூட்டணி முனைகின்றது. இருந்த போதிலும், அவர்களுக்கான பிரச்சினைகள் உக்கிரமடையுமனால் அவர்களுக்கான மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

இ.தொ.கா. பெரும் சக்தி இல்லை. ஒரு காலத்தில் இருந்தார்கள். தற்பொழுது சக்தியை இழந்து விட்டார்கள். அவர்கள் அந்த சக்தியைச் சரியாகப் பயன்படுத்தத் தவறிவிட்டார்கள். இப்பொழுது ஒப்பாரி வைப்பதில் எந்தப் பயனும் இல்லை. நாங்கள் தலைமைத்துவத்தை ஏற்றுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## காரைநகர் பிரதேச செயலகத்தில் இன்று கலாசாரப் பெருவிழா

காரைநகர், டிசெ. 11

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் காரைநகர் பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும், கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்தும் 2017 ஆம் ஆண்டுக்கான பிரதேச கலாசாரப் பெருவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் காரைநகர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவை மற்றும் கலாசார அதிகார சபை ஆகியவற்றின் தலைவருமான ஈஸ்வரானந்தன் தயாரூபன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், சிறப்பு விருந்தினராக காரைநகர் பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி கந்தையா ரட்ணசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

இவ்விழாவின் விசேட நிகழ்வாக மூத்த கலைஞர்கள், எழுத்தாளர்களுக்கான கலைஞானச் சுடர் விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. அத்துடன், பிரதேச கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ்களும் இந் நிகழ்வில் வைத்து வழங்கி வைக்கப்படவுள்ளன. அனைவரையும் இப்பெருவிழாவில் கலந்து கொள்ளுமாறு காரைநகர் பிரதேச கலாசாரப் பேரவையினர் அழைப்பு விடுக்கின்றனர்.

## யாழ். இந்து ஆரம்ப பாடசாலை தரம் 05 மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 11

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை தரம் 5 மாணவர்கள் ஒன்றுகூடலும் கௌரவிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி த.பிரபாகரன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரனும், யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராசாவும், கௌரவ விருந்தினராக யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் நா.மகேந்திரராசாவும் கலந்துகொள்வர். (இ)

## நாளை

12.12.2017
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம் : அத்தம் பி.இ. 11.35 வரை
திதி : தசமி பி.இ. 6.05 வரை
சுபநேரம் :10.50 – 12.20 வரை
இராகுகாலம்: 3.20 – 4.50 வரை

# அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளை நிலையான மட்டத்தில் முன்னெடுக்க நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 11

பண்டிகைக் காலத்தில் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்களின் விலையை நிலையான மட்டத்தில் முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

ரின் மீனின் விலையைத் தவிர ஏனைய அனைத்து இறக்குமதி செய்யப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றன என அந்தச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

பண்டிகைக் காலத்தில் லங்கா சதோச ஊடாக குறைந்த விலையில் உயர்தரத்திலான அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்ய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

கூடுதலான விலைக்குப் பொருள்களை விற்பனை செய்யும் வியாபாரிகளை சுற்றிவளைக்கும் நடவடிக்கைகளை நுகர்வோர் அதிகார சபை உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.



# ஊழல் மோசடிகளை ஒழிப்பதற்காக பெரிய வேலைத்திட்டம் முன்னெடுப்பு!

## அமைச்சர் சாகல ரத்நாயக்க கூறுகிறார்



கொழும்பு, டிசெ. 09

நிதி மோசடியை ஒழிப்பதற்காக பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு உருவாக்கப்பட்டது என சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் ஊழல் மோசடிகளை ஒழிப்பதற்காக அரசு பெரிய வேலைத் திட்டமொன்று மேற்கொண்டுள்ளது.

நிதி மோசடியை ஒழிப்பதற்காக பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவின் ஊடாகப் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதுவரை 13 வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றன. சட்ட மா அதிபரின் ஆலோசனைக்காக 93 பிரச்சினைகள் சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணைகள் சிக்கல் வாய்ந்தவையாகும். சில கொடுக்கல் வாங்கல்கள் வேறு நாடுகளில் இடம்பெற்றுள்ளன. அவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் குறித்து ஆராய்வதற்காக அந்த நாடுகளின் ஆதரவை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

உள்நாட்டு விசாரணைக் குழுக்களுக்கு விசேட அறிவை பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது. விசாரணை நடவடிக்கைகளுக்கு மனித வளங்களும் குறைவாக உள்ளன.

எனினும், அனைத்து சவால்களையும் வெற்றிகொண்டு இந்த விசாரணைகளில் முன்னேற்றம் காணப்பட்டு இருக்கின்றன.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் கீழ் நாட்டில் சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட்டன. இவற்றில் பொலிஸ் ஆணைக்குழுவும் ஒன்றாகும். இதன் மூலம் பொலிஸ் அதிகாரிகளால் அரசியல் அழுத்தங்கள் இன்றித் தமது சேவைகளை நிறைவேற்ற முடிந்துள்ளது.

இந்த மாற்றத்தை மக்கள் கண்டுகொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ். கோட்டையில் உணவுத் திருவிழா!

**15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை**

கொழும்பு, டிசெ. 11

யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியில் இலங்கை இராணுவத்தால், யாழ். உணவுத் திருவிழா நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம், 17 ஆம் திகதி வரை இந்த உணவுத் திருவிழா இடம்பெறவுள்ளது என இராணுவம் அறிவித்துள்ளது.

வடமாகாண விடுதிகள் சங்கத்துடன் இணைந்து இலங்கை இராணுவத்தின் யாழ். படைகளின் தலைமையகம் இந்த உணவுத் திருவிழாவை நடத்தவுள்ளது.

யாழ். கோட்டைக்கு முன்பாக நடைபெறவுள்ள இந்த உணவுத் திருவிழாவில் இசை நிகழ்ச்சிகளுக்கும் இராணுவம் ஏற்பாடு செய்துள்ளது.

வடக்கு, கிழக்கில் இராணுவம் சிவில் மற்றும் வணிகச் செயற்பாடுகளில் இருந்து விலகவேண்டும் என்று அனைத்துலக அளவில் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், யாழ்ப்பாண உணவுத் திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஹிக்கடுவ கடலில் சிக்கி உல்லாசப் பிரயாணி பலி

கொழும்பு, டிசெ. 11

ஹிக்கடுவ கடலில் குளித்துக்கொண்டிருந்த ரஷ்ய உல்லாசப் பிரயாணி ஒருவர் திடீரென எழுந்த அலையில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

ஹிக்கடுவ - திரணகமவில் உள்ள சுற்றுலா விடுதியொன்றிலேயே நேற்று முன்தினம் பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# பொலித்தீன் தொடர்பில் இனி சுற்றிவளைப்புகள்!

கொழும்பு, டிசெ. 11

மைக்ரோன் 20 இற்கும் குறைந்த நிறையில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் தொடர்பில், எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புகளை முன்னெடுக்கப்போகிறோம் என மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் இறக்குமதிகளைப் பரிசீலிக்கும் நடவடிக்கைகளைத் தற்போது தாம் ஆரம்பித்துள்ளதாக அந்தச் சபை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் மைக்ரோன் 20 இற்கும் குறைந்த நிறையுடைய பொலித்தீன் விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், தேசிய, சமயம், சமூகம், கலாசாரம் மற்றும் அரசியல் போன்ற அனைத்து நிகழ்வுகளிலும் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பல தொழில்நுட்பப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சீர்திருத்த சட்டமூலம்

கொழும்பு, டிசெ. 11

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சீர்திருத்தம் தொடர்பில் பல தொழில்நுட்பப் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்குடன் இந்த திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது என மகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் சீர்திருத்த சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஆரம்பித்துவைத்துஉரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக் குழுவின் கோரிக்கைக்கு அமைய இந்தத் திருத்தம் முன்வைக்கப்படுகின்றது என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில் –

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஒரே தினத்தில் தேர்தலை நடத்துவது தமது நோக்கமாகும் என்று தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து உள்ளூராட்சிமன்ற தேர்தல் சீர்திருத்த சட்டமூலம் 88 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதற்கு ஆதரவாக, 137 பேரும், எதிராக 49 பேரும் வாக்களித்தனர். 8 பேர் வாக்களிப்பதில் இருந்து தவிர்த்துக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருப்பி அழைக்கப்பட்டார் இலங்கைக்கான மலேசிய தூதுவர்!

மலேசியப் பிரதமர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையில், கொழும்பில் உள்ள தமது தூதுவரை மலேசிய அரசு திருப்பி அழைத்துள்ளது.

மலேசியப் பிரதமர் நஜிப் ரசாக் இரண்டு நாள் அதிகாரபூர்வ பயணமாக அடுத்த வாரம் இலங்கைக்கு வரவுள்ளார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி இரவு கொழும்பு வரும், மலேசியப் பிரதமர் நஜிப் ரசாக் , 19 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார்.

மலேசியப் பிரதமரின் பயணத்துக்கு இன்னமும் ஒரு வாரமே உள்ள நிலையில், கொழும்பில் இருந்த மலேசியத் தூதுவர் வான் சைதிவான் அப்துல்லா திடீரென மலேசிய அரசால் திருப்பி அழைக்கப்பட்டுள்ளார்.

தீவிரமான காரணங்களினாலேயே மலேசியத் தூதுவர் திருப்பி அழைக்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்ற போதிலும், திருப்பி அழைக்கப்பட்டமைக்கான காரணம் தெரியவரவில்லை.

இந்த நிலையில், மலேசியப் பிரதமரின் பயண ஒழுங்குகளைக் கவனிக்க, மலேசிய வெளிவிவகார அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று கொழும்பு வரவுள்ளது என்றும் கூறப்படுகிறது. (கு)

### சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு;

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மாபெரும் கண்டனப் பேரணி






மட்டக்களப்பு, டிசெ.11

சர்வதேசமனித உரிமைகள்தினத் தினை முன்னிட்டு கிழக்கு மாகாணத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து நேற்றைய தினம் மாபெரும் பேரணி ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இருந்து 700இற்கும் மேற்பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர்.

குறித்த பேரணி கல்லடிப் பாலத்தில் இருந்து ஆரம்பமாகி ஊர்வலமாக மட்டக்களப்பு மாவட்ட செயலகம் வரை சென்று, அங்கு மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்திலும் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவினர்கள் தொடர்பில் சர்வதேசவிசாரணையை வலியுறுத்தியும், அரசாங்கத்தை அதற்கு ஆதரவு வழங்குமாறு கோரியும் இந்தப் பேரணி முன்னெடுக்கப்பட்டது எனப் பேரணியின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பேரணியில் ஈடுபட்டவர்கள் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

காணாமல் போனவர்களை கண்டறியும் அலுவலகம் அமைக்கப்படும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் நிலையில் அந்த அலுவலகத்தில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் அமர்த்தப்படும் போதுதான் அதன் பணிகள் சிறப்பாக நடைபெறும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விசாரணைகள் சர்வதேசக் கண்காணிப்பாளர்களினால் மேற்கொள்ளப்படும்போதே அதன் உண்மைத்தன்மை வெளிப்படுத்தப்படும்.

எமது உறவுகள் காணாமல் போவதற்குக் காரணமாக இருந்தவர்கள் இன்று சுதந்திரமாக திரியும் பொழுது நாங்கள் எமது பிள்ளைகளைத் தேடி வீதிகளில் போராடும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

எமக்காகக் குரல்கொடுக்க வேண்டியவர்கள் அமைதியாக இருக்கும் நிலையில் நாங்கள் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், அரசே! அனைத்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும் நீயே பொறுப்பு கூறவேண்டும், சிறைச்சாலைகளில் கைதிகள்துன்புறுத்தப்படுவதைநிறுத்து!, மரணச் சான்றிதழ் எங்களுக்கு வேண்டாம், சர்வதேசமே எமக்காக குரல் கொடு அதற்காக அழுத்தம் கொடு போன்ற பதாதைகளை பேரணியில் கலந்து கொண்டார்கள் ஏந்தியிருந்தனர்.

அத்துடன் எமது உறவுகளை வலிந்து காணாமல் ஆக்கியவர்கள் தண்டிக்கப்பட வேண்டும், எங்கே எனது மகன்?, எனது அப்பா எங்கே?, காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தைத் திறந்து சர்வதேசத்தை ஏமாற்றாதே என்ற கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

மேலும் தமது பிள்ளைகள் இன்னும் எங்காவது மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என தாம் நம்புகின்றோம் எனவும், தமது பிள்ளைகளை ஜனாதிபதி கண்டுபிடித்துத் தரவேண்டும் எனவும் பேரணியில் கலந்து கொண்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

பேரணியின் போது, கிழக்கு மாகாணத்தில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், இணையத்தின் பிரதிநிதிகள், கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் என பெருமளவிலானோர் கலந்து கொண்டனர்.

மேலும், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவினர்களின் படங்களைக்கைகளில்ஏந்தியவண்ணம் கண்ணீருடன் பேரணியில் அவர்கள் கலந்து கொண்டமை சுட்டிக்காட்டத்தக்கது.

# மட்டக்களப்பில் 31 பேர் எயிட்ஸ் நோயால் பாதிப்பு

### வைத்தியர் அனுஷியா ஸ்ரீசங்கர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த ஆண்டு டிசெம்பர் மாதம் வரை 31 எயிட்ஸ் நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்டப் பாலியல் பரிமாற்ற நோய், எயிட்ஸ் நோய் கட்டுப்பாட்டு பொறுப்பு வைத்தியர் அனுஷியா ஸ்ரீசங்கர் தெரிவித்துள்ளார்.

எயிட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுகளிலும் முழு முயற்சியுடன் இடம்பெற்று வருவது தொடர்பாக அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது பற்றி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த 31 பேர் எயிட்ஸ் நோய்க்கு உள்ளாகியுள்ள நிலையில் அவர்களில் 26 பேர் கொழும்பிலும் 2 பெண்கள் மற்றும் 3 ஆண்கள் உட்பட 5 பேர் மட்டக்களப்பு மாவட்ட பாலியல் பரிமாற்ற நோய், எயிட்ஸ் நோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் நேரடிக் கண்காணிப்பிலும் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். இந்த 31 பேரிலும் அரைவாசிக்கும் அதிகமானோர் ஆண்கள் என்பதும் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான இவர்களில் 90 வீதம் பெரும்பாலும் வெளியிடங்களிலிருந்தே தொற்றுக்குள்ளாகியிருக்கின்றார்கள் என்பதும் ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாலியல் பரிமாற்ற நோய், மற்றும் எயிட்ஸ் நோய் கட்டுப்பாட்டு செயற்திட்டங்களின் விழிப்புணர்வு முழுமூச்சாக இடம்பெற்று வருகின்றது. இரத்தப் பரிசோதனை செய்து கொள்வதன் மூலம் எயிட்ஸ் தொற்று அடுத்தவருக்கு பரப்பப்படாமல் இருப்பதையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கும் மக்களிடம் ஊக்குவிப்பதே எமது விழிப்பூட்டலின் நோக்கம். எயிட்ஸ் ஒரு ஆட்கொல்லி நோய் என்பதாலும் சமூக அந்தஸ்து மற்றும் அவமானம் என்பனவற்றாலும் எயிட்ஸ் தொற்றுக்குள்ளானவர்கள் தங்களை மருத்துவ சிகிச்சைகளுக்குக் கூட வெளியே இனங்காட்டிக் கொள்ளாமல் இருந்து வரும் நிலைமை தற்போதைய விழிப்பூட்டல்களால் மேம்பாடு கண்டு வருகின்றது.

மட்டக்களப்பில் வருடாந்தம் சாதாரணமாகவே 12 ஆயிரம் கர்ப்பிணித் தாய்மாரும், மட்டக்களப்பு சிறைச்சாலையில் 2ஆயிரத்து 400 பேரும், வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக வருவோர்களில் சுமார் 3ஆயிரத்து 600 பேரும், கிராமங்களுக்குச் சென்று சுமார் 5ஆயிரம் தொடக்கம் 6ஆயிரம் பேரும் இரத்தப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றார்கள். எல்லோரும் முக்கியம் என்ற எயிட்ஸ் நோய்த் தடுப்புத் தொனிப் பொருளின் அடிப்படையில் எச்.ஐ.வி. தொற்றுள்ளவரையும், தொற்றில்லாதவரையும் கவனத்தில் எடுக்க வேண்டும். என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# போலி நாணயத்தாள்களை அச்சிட்ட இளைஞன் கைது

திருகோணமலை, டிசெ.11

திருகோணமலையில் போலி நாணயத்தாள்களைப் பிரதி எடுத்து அதனை விநியோகம் செய்து வந்த நிலையம் முற்றுகையிடப்பட்டதுடன், 24 வயதுடைய இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். குச்சவெளிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கும்புருபிட்டி 8ஆம் வட்டாரத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடற்படைப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களின் அடிப்படையில் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து போலி நாணயத்தாள்களை உருவாக்கும் கணனி, பிரதி எடுக்கும் இயந்திரம் மற்றும் ஆயிரம் ரூபாய் போலி நாணயத்தாள்கள் போன்றவை கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருள்கள் அனைத்தும் குச்சவெளிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

# அனுமதியின்றி திருமலையில் தமிழ் மன்னனின் சிலை!

### சிங்கள ஊடகம் குற்றச்சாட்டு



திருகோணமலை, டிசெ.11

அனுமதி எதுவுமின்றி திருகோணமலையில் தமிழ் மன்னனின் சிலையொன்று நிறுவப்பட்டுள்ளது எனச் சிங்கள ஊடகமொன்று குற்றம் சுமத்தியுள்ளது.

கிழக்கு மாகாணத்தை ஆட்சி செய்த தமிழ் மன்னன் எனக் குறிப்பிட்டு குளன் கோட்டன் மன்னனின் சிலை திருகோணமலையில் நிறுவப்பட்டுள்ளது. திருகோணமலை குளன் கோட்டான் வித்தியாலத்தில் இந்தச் சிலை நிறுவப்பட்டுள்ளது.

இந்தச் சிலையை நிறுவுவதற்கு அரசாங்கத்தினதோ அல்லது கல்வி அதிகாரிகளிடமோ அனுமதி பெற்றுக்கொள்ளப்படவில்லை என அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் என்.விஜேந்திரன், கல்விப் பணிப்பாளர் செல்வநாதன், பிரதேச செயலாளர் ஸ்ரீபாதி, பிரதேச சபை செயலாளர் எஸ்.யாழினி உள்ளிட்டவர்கள் இந்தச் சிலை அங்குரார்ப்பண நிகழ்வில் பங்கேற்றுள்ளனர்.

இதற்கு முன்னதாக யாழ்ப்பாணத்தில் பாண்டிய மன்னனின் சிலை நிறுவப்பட்டிருந்தது என திவயின சிங்கள ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

# தலைமறைவாக இருந்த சந்தேகநபர் கைது

திருகோணமலையில் திருட்டுச் சம்பவமொன்றுடன் தொடர்புடைய சந்தேகநபரொருவர் நீண்ட காலம் தலைமறைவாக இருந்து வந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் 26 வயதுடைய சந்தேகநபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் கடந்த வருடம் கந்தளாய் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் எனவும், அவர் நீண்ட காலமாகத் தலைமறைவாக இருந்து வந்துள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# 40 ஆண்டுகளில் இலங்கைக்கு கிடைத்த மிகப் பெரிய வெளிநாட்டு கொடுப்பனவு!

கொழும்பு, டிசெ. 11

நான்கு பத்தாண்டுகளுக்குப் பின்னர் இலங்கைப் பிரதமருக்கு மிகப் பெருமளவு தொகைக்கான காசோலை வழங்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறை முகத்தின் 99 ஆண்டு குத்தகை உரிமையைப் பெற்றுக் கொண்ட சீன மேர்ச்சன்ட்ஸ் குழுமம் என்ற சீன நிறுவனமே, சுமார் 29 லட்சத்து 20 ஆயிரம் டொலருக்கான காசோலையை வழங்கியுள்ளது.

இந்தக் காசோலையை கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றது.

சீன நிறுவனத்தின் சார்பில் அளிக்கப்பட்ட காசோலையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்களும், இலங்கைக்கான சீனத் தூதுவர் யி ஷியான்லியாங் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.




நான்கு பத்தாண்டுகளுக்குப் பின்னர் இலங்கை அரசு ஒரே தடவையில் பெற்றுக் கொண்டுள்ள மிகப் பெரியளவிலான வெளிநாட்டுக் கொடுப்பனவு இதுவாகும்.

இந்த நிதி சிறப்பு நிரந்தர வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு, பின்னர் இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கீட்டில் சேர்க்கப்படும்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த கட்டமாக, ருகுணு கைத்தொழில் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் உருவாக்கப்படும் என்று கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இதன்மூலம் ருணுகு பிரதேசம், கைத்தொழில் வலயமாக அபிவிருத்தி செய்யப்பட்டு, நூற்றுக்கணக்காக தொழிற்சாலைகள் உருவாக்கப்படும்.

இவ்வாறு உருவாக்கப்படவுள்ள தொழிற்சாலைகளில், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, இயற்கை எரிவாயு மின் திட்டம், சிமெந்து ஆலை என்பனவும் உள்ளடங்கியிருக்கும்.

இதற்கான பேச்சுக்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றுக்குத் தேவையான காணிகளை அடையாளம் காணும் பணிகளை ருகுணு அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொள்ளும்.

நவீன கடல்சார் பட்டுப் பாதையின் ஓர் அங்கமாக இலங்கை உள்ளது. எம்மிடம் கொழும்பு, அம்பாந்தோட்டை, திருகோணமலை என மூன்று முக்கிய துறைமுகங்கள் உள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வரவு – செலவுத் திட்டத்தை யதார்த்தபூர்வமாக எதிர்க்க எதிர்க்கட்சிகளால் முடியவில்லை!

**பிரதிய அமைச்சர் ஹர்ஷ டி சில்வா கூறுகிறார்**



கொழும்பு, டிசெ. 11

அரசு முன்வைத்த 2018ஆம்ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தை எதிர்க் கட்சியால் யதார்த்த ரீதியாக எதிர்க்க முடியாமல் போய்விட்டது என கொள்கை வரவுத் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் டொக்டர்ஹர்ஷ டிசில்வா தெரிவித்தார்.

மேற்படி வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தின் இறுதி நாளானநேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசுகள் முன்வைக்கும் வரவு-செலவுத் திட்டங்கள் எதிர்க்கட்சிகளின் கடுமையான எதிர்ப்பைப் பெறுகின்றமை இயல்பானதுதான். ஆனால், இம் முறை அவ்வாறான யதார்த்தமான எதிர்ப்பை நாம் காணவில்லை. இது குறித்து நிதி அமைச்சர், பிரதி நிதி அமைச்சர் மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகள் திருப்தி கொள்ளவேண்டும்.

பியர்விவகாரம் கடுமையான விமர்சனங்களுக்கு ஆளாகி வருகிறது. ஒரு சில கொள்கைகள் அடிப்படையில் வரிகள் விதிக்கப்படுகின்றனவேதவிர, மக்கள்மது அருந்த வேண்டுமா, வேண்டாமா என்பதை அது முடிவு செய்வதில்லை. வெளிநாடுகளிலும் இந்த நடைமுறை இருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ரயில்வேத் திணைக்களத்தை இழுத்து மூட வேண்டிவரும்!



**தொழிற்சங்கத்தின் செயலாளர் எச்சரிக்கை**

பணியாளர்கள் தமது வேலையை இழந்தவர்களாகக் கருதப்படுவார்கள் என்று போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்த போதும் ரயில்வே ஊழியர்கள் வேலைநிறுத்தத்தைக்கைவிடுவதாக இல்லை.

ரயில்வே ஊழியர்களின் சர்வ சாதாரணமாக வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர். இது மிகவும் ஆபத்தான ஒரு சூழல். பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சின் செயலாளர் டி.எஸ்.விதா னகே தெரிவித்துள்ளார்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் பணிக்குத் திரும்புவதற்கு இன்று வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது எனவும் அதற்குள் வேலைக்குத் திரும்பாதவர்களை பணி நீக்கம் செய்ய பொறுப்பதிகாரிகள் முடிவெடுத்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை,ரயில்வேநிலைய அதிபர்கள் சங்கத்தின் செயலாளர் இந்திக ருவன் பத்திரண கருத்துத் தெரிவிக்கும்போது, தற்போது 2,000 ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றார் எனவும் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், இந்த எண்ணிக்கை இனி பத்தாயிரமாக மாறும் என்றும் எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

எங்களை பணியை விட்டு விலக்கும் அமைச்சின் முடிவை வரவேற்கிறோம். ஆனால், அரசு அப்படிச் செய்யுமானால் ரயில்வே திணைக்களத்தை இழுத்து மூட வேண்டிவரும் என்று கடுமையாக எச்சரித்துள்ளார்.

## சாதாரண தர பரீட்சை நாளை ஆரம்பமாகிறது!

கல்விப் பொது தராதர சாதாரண தர பரீட்சைகள் நாளை ஆரம்பமாகவுள்ளன. இந்தப் பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை இடம்பெறும்.

இது தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

காலை 8.30 மணியளவில் பரீட்சைகள் ஆரம்பமாகும். எனினும், பரீட்சார்த்திகள் 8 மணியளவில் பரீட்சை நிலையங்களுக்குச் சமுகமளிக்க வேண்டும்.

பரீட்சைக்கு சமுகமளிக்கும்போது பரீட்சை அனுமதி அட்டை, தேசிய அடையாள அட்டை அல்லது அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை என்பவற்றை அவசியம் கொண்டுவர வேண்டும்.

பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் பரீட்சார்த்தி தான் விண்ணப்பித்துள்ள பாடம் தொடர்பான உறுதிப்படுத்தல்கள் பரிசோதனை செய்து கொள்வதோடு, அவை தொடர்பான ஏதேனும் மாற்றங்கள் காணப்படுமாயின் உடனடியாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்குமாறும் குறிப்பிட்டுள்ளது.

## உலகின் வெற்றிகரமான துறைமுகமாக தரமுயரும் அம்பாந்தோட்டை!

கொழும்பு, டிசெ. 11

அம்பாந்தோட்டை துறைமுகம் பங்குடமையின் கீழ் உலகின் வெற்றிகரமான துறைமுகமாக தர முயரும் என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

பல்வேறு தரப்பினரினதும் ஆலோசனைகள் பெறப்பட்டு நீலப் பசுமை கொள்கையின் கீழ் 2018 ஆம் ஆண்டிற்கான வரவு – செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வறுமையை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப் படவுள்ள கிராம சக்தி வேலைத்திட்டத்திற்காக அடுத்த வருடத்தில் 200 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அத்தியாவசிய சேவையாக ரயில் சேவை அறிவிப்பு!

### நாடாளுமன்றத்தில் அங்கீகாரம்

ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கும் வர்த்தமானி அறிவிப்புக்கு நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை ரயில் சேவையை அத்தியாவசிய மக்கள் சேவையாகப் பிரகடனப்படுத்தி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை சபை முதல்வர் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் முன்வைத்தார்.

இதனைத் தொடர்ந்து இந்த அறிவிப்புத் தொடர்பில் நாடாளுமன்றத்தின் விருப்பத்தைக் கோருமாறு அவர் சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார்.

இதற்கு அமைய அவசர வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்டது.

ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கும் வர்த்தமானி அறிவிப்புக்கு ஆதரவாக 127 பேர் வாக்களித்தனர்.

54 பேர் எதிராக வாக்களித்தனர். 11 பேர் வாக்களிப்பில் பங்குபற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தினசரி ராசி பலன் 11.12.2017

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் கார்த்திகைத் திங்கள் 26ஆம் நாள் திங்கட்கிழமை நவமித்திதி பி.இ. 1.22 மணிவரை பின்னர் தசமி . நட்சத்திரம் உத்தரம் மாலை 6.08மணிவரை பின்னர் அத்தம். சித்தயோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** - *காலை 7.44 மணி முதல் 09.10 மணி வரை*

**சுபநேரம்** - *பகல்12.26 மணி முதல் 01.56மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி** - *கார்த்திகை மாத தேய்பிறைநவமி*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *உத்தரம்*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம் :** நன்மையான நாள்.பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். வெளிநாட்டுத் தொடர்புகளை நல்ல பலனைத் தரும். வியாபாரத்தில் அமோக லாபம் வரும். விவசாயம் விருத்தியடையும்.

**ரிஷபம் :** சுபீட்சமான நாள். தனலாபம் அதிகரிக்கும். தடைப்பட்ட காரியம் நல்லபடியாக அமையும். உத்தியோகப்பணியில் இருந்த கஷ்டங்கள் நீங்கி, திறமைகளை வளர்த்துக் கொள்வர்.

**மிதுனம் :** கவலையான நாள். வருமானம் நலிவடையும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் உண்டாகும். பணிபுரியும் இடங்களில் செல்வாக்குச் சரியும். வரவுக்கு மீறிய செலவுகளால் கவலை உண்டாகும்.

**கடகம் :** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். செலவுகள் அதிகமாகும். மனரீதியான குழப்பங்கள் உண்டாகும். குறித்த நேரத்தில் காரியங்கள் நடக்காமல் போகும்.

**சிம்மம் :** உயர்வான நாள். பணம் தாராளமாக புழங்கும். பணியில் இருந்து வந்த சிரமம் குறையும். உத்தியோக உயர்வு கிடைக்கும். நல்லவர்களின் சேர்க்கையால் வளமடைவார்கள்.

**கன்னி :** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். வியாபாரத்தில் வெளியூர்களில் விரிவுபடுத்தி முன்னேற்றம் அடைவார்கள். உறவுகளை பலப்படுத்த அரும்பாடுபடுவார்கள்.

**துலாம் :** தீமையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் உட்பூசல்கள் காணப்படும். வியாபாரத்தில் பொருள்கள் தேங்கிக் கிடக்கும். செய்யும் தொழில் மந்த நிலை காணப்படும்.

**விருச்சிகம் :** ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். வியாபாரத்தில் ஆக்கபூர்வ முன்னேற்றம் காணப்படும். மாணவர்களுக்கு ஆசிரியர்களால் பாராட்டு கிடைக்கும்.

**தனுசு :** சமபலன்கள் காணப்படுகின்றன.வரவும், செலவும் சமமாக இருக்கும். கடன் வாங்கி தொழில் செய்பவருக்கு நெருக்கடி உண்டாகும். வங்கி உதவிகள் கிடைக்கும்.

**மகரம் :** நன்மையான நாள். பணவரவு அதிகரிக்கும். உத்தியோகத்தர்கள் பதவி உயர்வு இடமாற்றம் போன்ற நன்மை பெறுவார்கள். சகோதர உறவு வலுவடையும். பிரிந்தவர்கள் மீண்டும் இணைவார்கள்.

**கும்பம் :** கவலையான நாள். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். தொழிலில் பல இடைஞ்சல்கள் உண்டாகும். பயணத்தின் போது விபத்து ஏற்பட வாய்ப்பு உண்டாகும்.

**மீனம் :** மத்திமமான நாள். பொருள் வரவாய் இருப்பினும் செலவுகள் அதிகமாகும். வியாபாரத்தில் ஓரளவு திருப்தி அடையக்கூடியதாக இருக்கும். மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் எடுக்க வேண்டும்.

சந்திராட்டமநாள்: அவிட்டம் 3 ஆம், 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி முதலாம், 2 ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகாரியங்களில் ஈடுபடுவதை தவிர்க்கவும்.

# புதிய அரமைப்புத் தொடர்பாக வவுனியாவில் கலந்துரையாடல்





வவுனியா, டிசெ. 11

வவுனியாவில் மனித உரிமைகள் மற்றும் புதிய அரசமைப்பு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அன்புக்கும் நட்புக்குமான இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தை சேர்ந்த மூவின இளைஞர்களை ஒன்றிணைத்து இடம்பெற்றது.

மனித உரிமைகள் தினமான நேற்று அன்புக்கும் நட்புக்குமான இளைஞர் அமைப்பின் தலைவர் ரவீந்திர டி சில்வா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்துகொண்டார். மனித உரிமைகள் மற்றும் புதிய அரசமைப்பு தொடர்பாக இளைஞர்களால் கேட்கப்பட்ட கேள்விகளிற்கு பதில்களையும் அது தொடர்பான விளக்கங்களையும் வழங்கியிருந்தார்.

மேலும் இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுடன் தமிழ் சிங்கள இளைஞர், யுவதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை அனைத்து தரப்பினருக்கும் வலியுறுத்தும் வகையிலும், மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை மக்களுக்குத் தெளிவுபடுத்தும் நோக்கத்துடனும் இந்தத் தினம் உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகிறது.

1948ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 'சர்வதேச மனித உரிமைகள் சாசனம்' 30 உறுப்புரைகளைக் கொண்டது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# போதை மாத்திரைகளுடன் பெண் உட்பட மூவர் கைது !

பெருந்தொகை போதை மாத்திரைகளுடன் பெண் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

7000 போதை மாத்திரைகள் வைத்திருந்த நிலையில், வாரியபொல பிரதேசத்தில் வைத்து மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

39 வயதுடைய பெண், 49 மற்றும் 50 வயதுடைய இரண்டு ஆண்கள் இந்த திடீர் சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விற்பனைக்காக மோட்டார் சைக்கிளில் போதை மாத்திரைகளைக் கொண்டு செல்லும் போது இந்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூவரும் நீர்கொழும்பு, நாத்தாண்டிய மற்றும் மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இவர்கள் வாரியபொல நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர்.

# சட்டவிரோத மண் அகழ்வு முல்லைத்தீவில் படுதீவிரம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் பரவலாகச் சட்டவிரோதமாக மண் அகழ்வு இடம்பெற்று வருவதால், சூழல் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பெருமளவிலான ஆற்று மண் இவ்வாறு சட்டவிரோதமாக வெளிமாவட்டங்களுக்கு டிப்பர் ரக வாகனங்களில் இரவு பகலாகக் கொண்டு செல்லப்படுகிறது எனவும், இதற்கான அனுமதிப் பத்திரங்கள் செல்வாக்கின் அடிப்படையிலும் லஞ்ச அடிப்படையிலும் வழங்கப் பட்டு இந்தக் கடத்தல்கள் இடம்பெறுகின்றன எனவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதற்குச் சில உயர்மட்டத்தினரும் உடந்தையாக உள்ளனர். இயற்கைச் சமநிலையைப் பாதிக்கும் வகையில் மண் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. விவசாய நிலங்கள் பலவும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரதேச மக்களின் மணல் தேவையைப் பூர்த்தி செய்யாத நிலையில், இந்த ஆற்றுமண் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுவது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தும் பலன் கிடைக்கவில்லை என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.

# பூட்டிய வீட்டுக்குள் அழுகிய சடலம்!

மாத்தறையில், வீடொன்றினுள் இருந்து இறந்து பல நாள்களான ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்த வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசுவதாக அயலவர்கள் தகவல் தெரிவித்ததையடுத்து அங்கு சென்ற பொலிஸார், வீட்டின் பூட்டியிருந்த கதவை உடைத்துத் திறந்து உள்ளே சென்று ஆராய்ந்தனர்.

அப்போது, வீட்டின் படுக்கை அறையில் இருந்து, அழுகிய நிலையில் ஆண் ஒருவரின் சடலத்தைப் பொலிஸார் கண்டெடுத்தனர்.

அந்தச்சடலம் அந்த வீட்டில் வசித்த 64 வயது நபருடையது என்றும் தலையில் கடுமையாகத் தாக்கப்பட்டே அவரது உயிர் பிரிந்திருக்க வேண்டும் என்றும் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

பொலிஸார் விசாரணையைத் தொடர்கின்றனர். எனினும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

### யாழ். பிரதேச செயலகத்தில் 'அழகிய குடும்பம்' சிறப்பு நிகழ்ச்சி

யாழ். பிரதேச செயலக கலாசார சபையின் ஏற்பாட்டில் 'அழகிய குடும்பம்' என்ற தலைப்பில் கலைப் படைப்பாளிகளின் குடும்பங்களுக்கான சிறப்பு நிகழ்ச்சி -

எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு, பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வளவாளர்களாக யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத் துறையைச் சேர்ந்த வைத்தியர் திருமதி திருமகள் சிவசங்கர், யாழ். போதனா வைத்தியசாலை உளவளத் துணையாளர் நா.நவராஜ் ஆகியோர் கலந்துகொள்வர்.


இறுதியில் இன்னிசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

ஒழுக்கமான பயனுறுதிமிகு சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் கலைப்படைப்பாளிகளுக்கு உத்வேகம் கொடுக்கும் பேரெண்ணத்தோடு ஒழுங்கமைக்கப்பட்டுள்ள இந்த நிகழ்விலே கலைஞர்களின் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைக்கின்றனர். (இ)

காலைக்கதிர் Kalaikkathir



தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்.
கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர்.
அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது.
'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.





# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 32

### இராமேஸ்வரக் கம்பன் விழாப் பயணம் 07.08.1982

எங்கள் விழாவிற் கலந்துகொண்ட, இராமேஸ்வரம் இராஜகோபால் சாஸ்திரிகள், தங்களின் இராமேஸ்வர கம்பன் விழாவுக்கு எங்களை அழைத்தார். சிவராமலிங்கம் மாஸ்டர், வித்துவான் ஆறுமுகம், வித்துவான் வேலன் ஆகியோரும் உடன் வருவதாய் இருந்தது. நிகழ்ச்சி நிரலில் அவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். அழைப்பிதழ் அச்சாகி வந்தபின், அவர்கள் திடீரென விழாவுக்கு வராமல் பின் வாங்கினர். ஆனாலும், நானும், குமாரதாசனும், குமரனும், எனது அம்மா, அண்ணன், தங்கை, குமாரதாசனின் அம்மா, மாணிக்கத்தின் தமையன் கந்தசாமி, தாயார், எங்கள் கழக உறுப்பினன் செல்லத்துரை என, பெருங்கூட்டமாய் அவ்விழாவுக்குச் சென்றோம். குமரனும், நானும் அவ்விழா நிகழ்ச்சியிற் கலந்து உரையாற்றினோம். குமரன் கவியரங்கத்திலும் கலந்துகொண்டார். கம்பன் அடிப்பொடியின் மறைவின்பின் நடந்த முதற் கம்பன் விழா இது. கம்பன் விழாக்களை வழக்கமாகக் கம்பன் அடிப்பொடி தான் ஆரம்பித்து வைப்பார். அவர் இல்லாமல் நடந்த முதல் விழா ஆதலால், பேறறிஞர் பலரும் கண்ணீரோடு மேடையேறத் தயங்கி நின்றனர். என் குருநாதர் கலங்கிய கண்களுடன், கோதண்டராமக் கவுண்டர் எனும் பேறறிஞருக்கருகிற் சென்று, ''அண்ணா! இனி இந்தக் குடும்பத்துக்கு நீங்கதான் மூத்தவர், தயங்காம நீங்களே போய் ஆரம்பிச்சுடுங்கோ'' என்று சொல்ல, கண்ணீரோடு கவுண்டர் விழாவை ஆரம்பித்தது மனதில் இன்றும் நிழலாடுகிறது. என் மனதில், கழகம் ஒரு குடும்பம் என்ற உணர்வை, ஆழமாக உருவாக்கிய விழா இது. இவ்விழாவில் எனது குருநாதர் தலைமையில் நான் பேசினேன். தொடர்ந்து நடந்த சென்னை விழாவிலும் குருநாதரின் சிபாரிசின் பெயரில், எனக்கு நிகழ்ச்சி தரப்பட்டிருந்தது. அவ்விழா அழைப்பிதழிலும் என் பெயர் அச்சாகியிருந்தது. இடையில் எங்களுடன் வந்த வீட்டுப் பெண்களுக்குள் சில பிரச்சினைகள் ஏற்பட, சென்னை விழாவிற் கலந்துகொள்ளாமல் திருச்சியோடு பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பினோம்.

★ ★ ★

### கோடூரார் தந்த கௌரவம்!

இராமேஸ்வரத்தில் நாங்கள் எல்லோரும் தங்குவதற்கென, 'கொட்டேஜ்' என்று சொல்லப்படும் சிறு வீடுகளை, கோடூர் இராஜகோபால் சாஸ்திரிகள் ஒழுங்கு செய்திருந்தார். மிகப்பெரிய பண்பாளர் அவர். என் குருநாதரின் உயிர் நண்பர். இயற்துறையில் மட்டுமன்றி, இசைத்துறையிலும் பெரும் நாட்டங் கொண்டவர். நன்றாக வீணை வாசிப்பார். இசைமேதை மதுரை ரி.என்.சேஷகோபாலனை உருவாக்க, பெரும்பாடுபட்டவர் இவர். கோடூரார் வீடு என்றால் எவர்க்கும் தெரிந்திருக்கின்ற அளவு, இராமேஸ்வரத்தில் பிரசித்தமானவர். 'கொமியூனிசக்' கொள்கை கொண்ட பிராமணர். அவரும் எங்களைத் தன் பிள்ளைகளைப் போலவே நேசித்தார். அக்காலத்தில் 'இராமானுஜம்' கப்பல், இராமேஸ்வரத்தின் கரைக்குச் செல்லாமல் சற்றுத் தூரத்திலே நிற்கும். கப்பலில் வந்தவர்களை படகுகளிலே தான் கரைக்கு அழைத்துச் செல்வார்கள். அவ்வூரில் மிகப் பெரியவராய்ப் போற்றப்பட்ட சாஸ்திரிகள், இளைஞர்களான எங்களை மதித்து, படகேறி கப்பல் வரை வந்து வரவேற்றார்.

★ ★ ★

### கோப்பிக்காக குருநாதரிடம் வாங்கிய பேச்சு

அவ்விழாவிற்குச் சென்றிருந்தபோது, படிப்பினையான ஒரு சம்பவம் நிகழ்ந்தது. நாங்கள் தங்கியிருந்த குடில்களுக்கு, விடியற்காலையிலேயே கோப்பி விற்பவன் வருவான். விடிகாலையில் தூக்கத்தால் எழும்பிவிட்ட நாங்கள், எங்கள் பணத்தில் அவனிடம் கோப்பி வாங்கி குடித்துக் கொண்டிருந்தோம். அப்போது என் குருநாதரும், சாஸ்திரிகளும் புதுவை அருணகிரியாரும், எங்களைப் பார்க்கவென வந்தனர். எங்கள் கைகளில் கோப்பியைப் பார்த்ததும், ''எப்போ காப்பி வந்தது?'' என்று குருநாதர் கேட்டார். நாங்கள் காசுக்கு வாங்கி கோப்பி குடிப்பதை அறிந்ததும், குருநாதருக்குக் கடுமையான கோபம் வந்து விட்டது. ''நீங்க சாஸ்திரிகளின் விருந்தினராய் வந்தப்புறம், ஒங்க காசுக்கு காப்பி வாங்கி குடிச்சால், அது அவருக்குச் செய்கிற பெரிய அவமரியாதை இல்லையா? காப்பி வராமல் இருந்தால்கூட பேசாமல் இருக்கனுமே தவிர, நீங்க பணம் கொடுத்து வாங்கிக் குடிக்கக் கூடாது.'' என்று சத்தம் போட்டார். குருநாதருக்குக் கோபம் வந்ததை முதன் முதலாய்ப் பார்த்தேன். இதே போல முதல் தரம் காரைக்குடிக்குச் சென்ற போதும், நிகழ்ந்த அனுபவத்தை முன்னரே சொல்லியிருக்கிறேன். மேன் மக்கள் மேன் மக்களே! நல்லோர் சங்கமத்தால் பண்பாட்டைப் பயின்றோம்.

★ ★ ★

### ஆசிரியர் தேவன் மறைவு (08.12.1982)

1982 டிசெம்பர் 8ஆம் திகதி ஆசிரியர் தேவன் மறைந்தார். டிசெம்பர் 11 ஆம் திகதி பாரதி நூற்றாண்டு விழாவையொட்டி விழா ஒழுங்கு செய்திருந்தோம். தேவன் மறைவினால் அவ்விழா இரத்து செய்யப்பட்டது. யாழ். இந்துக்கல்லூரியில் பல காலம் ஆசிரியராய் இருந்தவர் தேவன்.அவருடன் நான் செய்த ஒரு வழக்காடு மன்றத்தால், ஆரம்பத்தில் அவர் என்னை வெறுத்தார். பின் அவர் சுகவீனப்பட்டிருந்தபோது, நானும் என் நண்பர்கள் சிலரும் அவருக்கு இரத்தம் கொடுத்திருந்தோம். அதன்பின் எங்கள் அன்பைப் புரிந்துகொண்டு, எங்கள் மேல் பெரிய பாசம் காட்டினார். சந்தைக்குச் சென்று பொருள்கள் வாங்குவதில் 'விண்ணர்' அவர். சந்தைக்குச் செல்லும் போதெல்லாம் ஜெயராஜுக்குப் பிடிக்கும் என்று சொல்லி, தொடர்ந்து பலாப்பழங்கள் வாங்கி அனுப்புவார். பெரும் ஆங்கிலப் புலமையாளர், மிகச் சிறந்த மொழிபெயர்ப்பாளர், சிறந்த நாடகாசிரியர், இயக்குநர், சிறுகதை நாவல்கள் பல எழுதியவர், விளையாட்டு விமர்சகர், மேடையறிவிப்பாளர் எனப் பல முகங்கள் தேவனுக்கு இருந்தன. யாழ்ப்பாணத்தில் அவரைத் தெரியாதவர்கள் இருக்கவில்லை. அவரது தமிழிலும் ஆங்கில வாடை இருக்கும். எங்கள் திருநந்தகுமாரின் இலட்சிய குரு அவர்தான். அவரை அவன் உயிராய் நேசித்தான். இன்றும் அவன் பேச்சில் அவரின் சாயல் தெரியும். அவர் மரணம் கழகத்திற்குப் பெரும் இழப்பாயிற்று.

★ ★ ★

### இரண்டாம் கட்டத் தொண்டர்கள்

இக்கால கட்டத்தில் கம்பன் கழகத்தில் இணைந்திருந்த சில இளைஞர்கள், கழகத்திற்காக உண்மையாய்ப் பாடுபட்டனர். அவர்களைப் பற்றியும் சொல்ல வேண்டும்.


★ ★ ★

(தொடரும்...)

காலைக்கதிர்
Kalaikkathir



அண்மையில் றியர் அட்மிரல் சரத் வீரசேகரவால் ‘சிலோன்ருடே’ ஊடகத்திற்கு ‘விக்னேஸ்வரன் பதவி விலக வேண்டும்’ என்கின்ற தலைப்பில் வழங்கப்பட்ட நேர்காணல் தொடர்பாகப் பதிலளிக்க வேண்டிய தேவையுள்ளது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். அந்தவகையில் 23 நவம்பர் 2017 அன்று திகதியிடப்பட்ட சிலோன் ருடே ஊடகத்தில் வெளியாகிய அட்மிரல் வீரசேகரவுடனான நேர்காணலில் அவரால் வழங்கப்பட்ட பதில்கள் தொடர்பான தனது கருத்துக்களை வடக்கு மாகாண முதலமைச்சர் மின்னஞ்சலின் ஊடாக வழங்கியுள்ளார்.



## சிங்கள மொழி தோன்ற முன்

# சிங்கள மன்னன் எப்படி உருவானான்?

**முதலமைச்சர்:**

வடக்கு கிழக்கு அல்லது நாட்டின் ஏனைய ஏழு மாகாணங்களிலும் வாழும் மக்கள் தமது தனிப்பட்ட கலாசாரம், மரபு மற்றும் அவாக்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு தம்மைத் தாமே ஆளும் கூட்டாட்சி நிர்வாக அலகின் மூலம் இந்த நாட்டின் ஒன்றிணைப்பைத் தக்கவைத்துக் கொள்ள முடியும்.

சிறிலங்கா சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் சிங்கள மக்கள் பெற்றுக் கொள்ளும் நன்மைகளைத் தொடர்ந்தும் அவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே றியர் அட்மிரல் வீரசேகர ஒற்றையாட்சி நிர்வாக அலகை விரும்புவது போல் தோன்றுகின்றது.

சிறிலங்கா சுதந்திரமடைந்த போது இங்கு வாழும் சிறுபான்மை சமூகங்களின் நலன்களையும் பேணுவதாக அரசியல்சாசனத்தின் 29 ஆவது பிரிவை அனுமதித்ததன் மூலம் சிங்களவர்கள் வாக்குறுதி அளித்தனர்.

ஆனால், அடுத்த ஆண்டே அதாவது 1949 இல், மலையக தமிழ் மக்களின் வாக்குரிமைகளை சிங்களத் தலைவர்கள் பறித்தனர். இதேபோன்று சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளைப் பறிக்கும் முகமாக சிங்களம் மட்டும் சட்டம் மற்றும் கல்வித் தரப்படுத்தல் சட்டம் போன்றனவும் நடைமுறைப் படுத்தப்பட்டன. பாரம்பரிய தமிழ் பிரதேசங்கள் கொலனித்துவத்திற்கு உட்படுத்தப்பட்டன. இவை சிறுபான்மை மக்களைப் பெரிதும் பாதித்தன.

> சிறிலங்கா ஓர் ஒற்றையாட்சி நாடு எனவும் ஒற்றையாட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சிங்களவர்கள் பல்வேறு அளப்பரிய தியாகங்களைப் புரிந்துள்ளனர் எனவும் சரத் தெரிவித்துள்ளார்.

### முழு நாட்டையும் ஆண்ட தமிழ் மன்னன் எல்லாளன்

**முதலமைச்சர்:**

இது பொய். இவர் வரலாற்றை எங்கே கற்றுக்கொண்டார்? 1833 வரை இந்த நாடு பிரிக்கப்பட்டிருந்தது. தமிழ் பேசும் மக்கள் தமக்கென தனியான ஓர் இராச்சியத்தையும் கிழக்கு மாகாணம் குறுநில தமிழ்த் தலைவர்களாலும் ஆளப்பட்டன. வடக்கும் கிழக்கும் இணைந்து தமிழ் பேசும் பிரதேசமாக நிர்வகிக்கப்பட்டன. இத்தீவில் மூன்று அல்லது நான்கு தனித்தனியான இராச்சியங்கள் காணப்பட்டன. 44 ஆண்டுள் ஆட்சி செய்த எல்லாளன் என்கின்ற தமிழ் மன்னன் இத்தீவு முழுவதையும் ஒன்றிணைத்து தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் வரை ஒருபோதும் இங்கு ஒற்றையாட்சி நிர்வாகம் காணப்படவில்லை.

> இந்த நாட்டில் கூட்டாட்சி நிர்வாக அலகு ஏற்றுக்கொள்ளப்பட்டால் நாடு பிளவுபட்டுவிடும் என றியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்திருந்தார்.

**முதலமைச்சர்:**

தற்போது கூட இந்த நாடு பிளவுபட்டே காணப்படுகிறது. இது சிங்கள பௌத்த தேசம் அல்ல. இங்கு கிறிஸ்தவ மற்றும் இந்து மதங்களைப் பின்பற்றும் சிறிலங்காத் தமிழர்கள் மற்றும் மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவ, பௌத்த மதங்களைப் பின்பற்றும் சிங்களவர்கள், வேடுவர்கள் ஆகிய சகல இன மதத்தினருக்கும் இந்த நாடு சொந்தமானதாகும்.

ஒற்றையாட்சி அரசமைப்பின் மூலம் செயற்கையான ஒற்றுமை ஒன்று இங்கு காணப்படுகிறது. ஒற்றையாட்சி அரசமைப்பின் முழுமையான அதிகாரத்தையும் சிங்களவர்கள் கொண்டுள்ளமையால் இந்த நாட்டை அவர்கள் தமது கட்டுப் பாட்டின் கீழ் வைத்திருக்கின்றனர். இதுவே இங்கு பிரச்சினை ஏற்படுவதற்கான காரணமாகும்.

### சிங்களவரால் தமிழரின் உரிமைகள் புறக்கணிப்பு

பிரித்தானிய ஆட்சியாளர்கள் சிங்களவர்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையை சிங்களவர்கள் தவறாகப் பயன்படுத்துவதுடன் சிங்களவர்கள் ஆரம்பத்திலிருந்து தமிழ் மக்களின் உரிமைகளைப் புறக்கணித்து வருகின்றனர்.

சிங்கள மற்றும் தமிழ் மக்களுக்கு சமஅந்தஸ்து வழங்கப்படுவதாக சேர் ஜோன் கொத்தலாவ தெரிவித்த போது, சிங்கள மட்டும் சட்டம் 24 மணித்தியாலங்களில் நடைமுறைப்படுத்தப்படும் என எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க அறிவித்தார். இதன்மூலம் இவர் பெரும்பான்மை சமூகத்தின் மட்டமான உள்ளுணர்வுகளை வென்றெடுத்ததன் மூலம் 1956 இல் இடம்பெற்ற தேர்தலில் வெற்றி பெற்றார். அதாவது நான் இங்கே மட்டமான உள்ளுணர்வுகள் என ஏன் குறிப்பிட்டுள்ளேன் என்றால், 1958 இல் சிங்களவர்களால் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதன் பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழ் மக்கள் மீது பெரும்பான்மை சமூகத்தினர் படுகொலைகளை நிகழ்த்தினர்.

இவ்வாறான படுகொலைகள் மற்றும் கிளர்ச்சிகள் போன்றன சிங்கள அதிகாரத்துவத்தாலும் ஏனைய சமூகங்களை சிங்கள சமூகத்தால் ஏற்றுக்கொள்ள முடியாமையுமே காரணமாகும். தமிழ் பேசும் மக்கள் உட்பட அனைத்து சமூகங்கள் மத்தியில் சமத்துவத்தையும் கௌரவத்தையும் கூட்டாட்சி நிர்வாக அலகின் மூலம் நடைமுறைப்படுத்த முடியும். மக்கள்தொகையில் அதிகமுள்ள சமூகம் ஒன்று ஒருபோதும் மற்றைய சமூகங்களின் உறுப்பினர்களை விடப் பெரிதாகவோ அல்லது சிறந்ததாகவோ இருக்க வேண்டும் எனக் கருதமுடியாது.

### தமிழ் மக்கள் தொடர்பில் தவறான தகவல்கள்

அனைத்து மக்களும் சமஉரிமையைக் கொண்டுள்ளனர். தமிழ் பேசும் மக்களின் தனித்துவம் பேணப்பட வேண்டும். தற்போது இந்த நாடு பௌத்த சிங்கள நாடு என அழைக்கப்படும் நிலை காணப்படுவதுடன் தமிழ் மக்கள் தொடர்பாகத் தவறான தகவல்கள் கொடுக்கப்படுகின்றன. தமிழர் பாரம்பரிய வாழிடங்களில் சிங்களவர்களைக் குடியேற்றும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

ஒன்றுபட்ட சிறிலங்காவின் நல னுக்காக இங்கு வாழும் ஏனைய சமூகங்களுடன் பணியாற்றும் போது எமது தனித்தன்மையையும் கௌரவத்தையும் பேணுவதற்கான ஒரு சிறந்த ஏற்பாடாக கூட்டாட்சி காணப்படுகிறது. இதன் காரணமாகவே ஒற்றையாட்சிக்குப் பதிலாக நாங்கள் கூட்டாட்சி நிர்வாக அலகை கோரியிருந்தோம்.

> சரத் என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பாகவும் குறிப்பிட்டிருந்தார். அதாவது, கூட்டாட்சியை அமுல்படுத்தினால் சிங்களவர்களும் முஸ்லிம்களும் யாழ்ப்பாணத்தில் வாழமுடியாது எனவும் இதனாலேயே நான் தமிழ் இளைஞர்களிடம் சிங்களவர்களைத் திருமணம் செய்ய வேண்டாம் என அறிவுரை கூறியிருந்ததாகவும் சரத் தனது செவ்வியில் குறிப்பிட்டிருந்தார்.

**முதலமைச்சர்:**

நான் எனது பின்னணியை நினைத்துப் பெருமைப்படுகிறேன். நான் இந்த நாட்டின் பல பாகங்களிலும் வாழ்ந்துள்ளேன். இந்த நாட்டில் வாழும் அனைத்து மதங்கள் தொடர்பான அறிவை நான் கொண்டுள்ளேன். பௌத்தம் தொடர்பாக வணக்கத்திற்குரிய நாரதா தேரர் கருத்துரைகளை வழங்கும் போதெல்லாம் நான் வஜிரமயாவிற்கு சென்றிருந்தேன். இந்த நாட்டில் பேசப்படும் மூன்று பிரதான மொழிகளையும் ஓரளவிற்கு அறிந்து வைத்துள்ளேன். நான் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர்கள், மலாயர்கள் மற்றும் ஏனைய இனத்துவர்களுடன் நெருங்கிப் பழகியுள்ளேன்.

### நான் இலங்கைத் தமிழன்

நான் ஓர் இலங்கைத் தமிழன் என்றே கருதுவேனே தவிர சிறிலங்கன் எனக் கருதுவதில்லை. ஆனால், சிங்களவர்களும் முஸ்லிம்களும் யாழ்ப்பாணத்தில் வசிப்பதற்கான உரிமையைக் கொண்டிருக்கவில்லை என நான் ஒருபோதும் கூறவில்லை. இது தவறானது. அரசின் ஆதரவுடன் தற்போதும் மேற்கொள்ளப்படும் கொலனித்துவத்தை நான் எதிர்க்கின்றேன். தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழும் இடங்களில் திட்டமிட்ட ரீதியில் சிங்களக் குடியேற்றங்களை சிறிலங்கா அரசு மேற்கொண்டு வருவதை நான் எதிர்க்கின்றேன்.

என்னுடைய சொந்தப் பிள்ளைகளே சிங்களவர்களைத் திருமணம் செய்துள்ள போது நான் எவ்வாறு தமிழ் இளைஞர்களிடம் சிங்களவர்களைத் திருமணம் செய்யக்கூடாது எனத் தெரிவித்திருக்க முடியும்?

> சிறிலங்காவின் உண்மையான வரலாற்றை நான் அறிந்திருக்க வேண்டும் எனவும் சிறிலங்கா வரலாற்று ரீதியாக தனிநாடாகவே உள்ளதாகவும் சரத் தெரிவித்திருந்தார்.

**முதலமைச்சர்:**

இலங்கைத் தமிழ் மக்களின் வரலாறை இங்கு கூறவேண்டும். தமிழ் திராவிடர்கள் இந்த நாட்டின் மூலக் குடி மக்களாவர். தமிழர்கள் வரலாற்றின் சில கட்டங்களின் பின்னரே இந்த நாட்டிற்கு வந்தனர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இவர்கள் அனைவரும் இந்த நாட்டின் மூலக் குடிமக்களான திராவிடத் தமிழர்களாகவே கருதப்படுகின்றனர். ஒரு பாடசாலையில் பல்வேறு வகுப்புக்களில் மாணவர்கள் இணைகின்றனர். ஆனால், இவர்கள் அனைவரும் அதே பாடசாலையின் பழைய மாணவர்களாகவே கருதப்படுகின்றனர்.

### ஒன்றுபட்ட நாடாக உருவாக்கிய பெருமை எல்லாளனுக்கே உரியது

இதேபோன்றே வடக்கு கிழக்கில் உள்ள அனைத்துக் குடிமக்களும் திராவிடத் தமிழர்களாவர். 44 ஆண்டுகளாக ஆட்சி செய்த தமிழ் மன்னனான எல்லாளன் காலத்திலேயே இலங்கை ஒரு தலைமையின் கீழ் ஆளப்பட்டது. அதற்கு முன்னர் இந்த நாடு பல்வேறு சுயாதீன மாநிலங்களைக் கொண்டிருந்தது.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)



தனித்தனி இராச்சியங்களாக இருந்த

# இலங்கைத்தீவை ஒன்றிணைத்தவன்

# மன்னன் எல்லாளனே!

## அதன் பின்னரே ஒன்றுபட்ட நாடானது

ஒரு மன்னன் இந்த நாட்டிலிருந்த அனைத்து இராச்சியங்களையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து அவற்றை ஒன்றாக இணைத்திருக்கா விட்டால் ஒருபோதும் ஒன்றுபட்ட சிறிலங்கா உருவாகியிருக்காது.

பிரித்தானியாவின் கொலனித்துவத்தின் கீழ் சிறிலங்கா உட்பட்டி இருந்த காலப் பகுதியில் அதாவது 1833 இல் பல வேறுநிர்வாக அலகுகள் ஒன்றிணைக்கப்பட்டு ஒற்றையாட்சி கொண்டு வரப்பட்டது. இன்றுவரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் பெரும்பான்மைத் தமிழ் பேசும் மாகாணங்களாக உள்ளமையால் கடந்த காலங்களில் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் தமிழ் பேசும் மக்களின் குடியியலில் மாற்றம் கொண்டு வருவதற்கான திட்டமிட்ட முயற்சிகளை மேற்கொண்டன. தற்போதும் இந்த நடவடிக்கைகள் இராணுவப் படைகளின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன.

**சிறிமாவோ ஆட்சியில் திருகோணமலையில் சிங்கள கொலனித்துவங்கள்**

1970 களில் சிறிமாவோவின் ஆட்சி இடம்பெற்ற போது திருகோணமலையைச் சூழவும் சிங்கள கொலனித்துவங்கள் இடம்பெற்றன. இவ்வாறு குடியேற்றப்பட்டவர்களை நான் 1970களில் சந்தித்தேன். அரசாங்கமே தங்களை தமிழ் மக்களின் பிரதேசங்களில் குடியேற்றுவதில் விருப்பம் கொண்டிருந்ததாகவும் ஆனால், தமக்கான போதியளவு பாதுகாப்போ அல்லது வசதிகளோ ஏற்படுத்திக் கொடுக்கவில்லை எனவும் குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள் என்னிடம் முறையிட்டனர்.

நான் ஒரு சிங்களவன் என நம்பியே அவர்கள் என்னிடம் இதனைத் தெரிவித்தனர். தமிழ் மக்களின் பாரம்பரிய வாழிடங்களில் கையகப்படுத்தி அங்கே சிங்களவர்களைக் குடியேற்றும் ஒரு திறந்த கொலனித்துவமாக இது காணப்பட்டது.

**கூட்டாட்சி நிர்வாக அலகை விரும்பும் படித்த சிங்களவன்**

சிங்களவர்கள் மத்தியில் தெற்கில் வாழும் 58 சதவீத தமிழ் மக்கள் தொடர்பாக ரியர் அட்மிரல் சரத் சுட்டிக்காட்டியிருந்தார்.

**முதலமைச்சர்:**

அவர்கள் ஒரு நாட்டின் கீழ் வாழ்கின்றனர். ஆகவே, தாம் வடக்கிலா அல்லது தெற்கிலா வாழவேண்டும் என்பதை அவர்கள் தீர்மானிக்க முடியும். கொழும்பிலுள்ள தமிழர்களோ அல்லது வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள சிங்களவர்களோ பலவந்தமாக வெளியேற்றப்பட முடியாது. இது கூட்டாட்சி தொடர்பான பிழையான கருத்தாகும். சிங்கள மக்கள் மத்தியில் கூட்டாட்சி தொடர்பாக தவறான புரிந்துணர்வு காணப்படுகிறது.

அரசியல்வாதியல்லாது ஒவ்வொரு படித்த சிங்களவனும் இந்த நாட்டில் அனைத்து சமூகங்களும் சமத்துவத்துடனும், கௌரவத்துடனும், சமாதானத்துடனும் வாழ்வதற்கு அனுமதிக்கும் பொருத்தமான அரசமைப்பு ஏற்பாடுகளைக் கொண்ட கூட்டாட்சி நிர்வாக அலகை வரவேற்கிறார்கள்.

அரசாங்கத்தில் வடக்கின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியைத் தாங்கள் திருப்பி யனுப்பியதாக டக்ளஸ் தேவானந் தாவை மேற்கொள் காட்டி ரியர் அட்மிரல் சரத் குறிப்பிட்டிருந்தார்.

**முதலமைச்சர்:**

மீண்டும் அவரது கருத்து பிழையானது. இன்றுவரை வடக்கிற்காக ஒதுக்கப்பட்ட ஒரு சதத்தைக் கூட நாங்கள் திருப்பி அனுப்பவில்லை. பொருத்தமான நிதி முகாமைத்துவத்திற்காக வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சு முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது. 831 அமைச்சுக்கள், மத்திய மற்றும் மாகாணத் திணைக்களங்கள், உள்ளூராட்சி சபைகள் ஆகியவற்றின் மத்தியில் வடக்கு மாகாண முதலமைச் சரின் அமைச்சு இந்த வாரம் தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டது.

## போர்க் குற்றங்களை இழைத்தவர்களே இன்று போர்க் கதாநாயகர்கள்



இந்த அடிப்படையில் நாங்கள் இந்த ஆண்டு அபிவிருத்திப் பணிகளை ஆற்றியுள்ளோம். ஆனால், மத்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைவாக முழுமையான நிதியையும் எம்மிடம் வழங்கவில்லை. ஒப்பந்தகாரர்கள் பணிகளை நிறுத்தியுள்ளனர். 100 கோடிக்கும் மேற்பட்ட நிதி எமக்கு வரவேண்டியுள்ளது. இது தொடர்பாக ரியர் அட்மிரல் சரத்திற்கு ஏதாவது தகவல்கள் தேவைப்படின் எம்மை நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அவருக்கு நாங்கள் பதிலளிப்போம். எமது மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதியிடம் அவர் இது தொடர்பாக ஏன் கேட்கிறார்? தற்போதும் டக்ளஸ் தேவானந்தா ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார் எனில் அதற்குக் காரணமான விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமைக்கு நன்றிகள்.

இந்த முறைமை இல்லாவிட்டால் இவர் தற்போது முன்னாள் அமைச்சராக உள்ளமை போன்று அவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராகவே இருந்திருப்பார்.

தேவநம்பிய தீசன் ஒரு தமிழ் மன்னன் என்பதை சரத் ஏற்றுக்கொள்ளவில்லை.

**முதலமைச்சர்:**

தேவநம்பிய தீசன், சிங்கள மொழி தோன்றுவதற்கு முன்னர் வாழ்ந்த மன்னன் ஆவார். ஆகவே, அவர் எவ்வாறு ஒரு சிங்களவராக இருக்க முடியும்? சிங்கள மொழி கிட்டத்தட்ட கி.பி 6 ஆவது அல்லது 7 ஆவது நூற்றாண்டின் பின்னர் மட்டுமே தோற்றம் பெற்றது. சிங்கள மொழி தோன்றுவதற்கு முன்னர் நாட்டை ஆட்சி செய்த மன்னனை சிங்களவர் எனக் கூறுவது முட்டாள்தனமானது. சிங்கள மொழி தோன்றியதன் பின்னர் எழுதப்பட்ட நூல்களில் எமது நிலங்கள் தொடர்பாக அவர்களுக்கு விருப்பமான கருத்துக்கள் எழுதப்பட்டிருக்கலாம்.

இந்த நாட்டின் மூலப்பெயர் சிங்கலே என ரியர் அட்மிரல் வீரசேகர குறிப் பிட்டிருந்தார்.

**ஈழம் என்பதே மூலப்பெயர்**

**முதலமைச்சர்:**

மீண்டும் இது பொய்யானது. ஈழம் என்பதே மூலப் பெயராகும். ஹெல என்பது ஈழம் என்பதன் பாளி மொழிச் சொல்லாகும். சிங்கலே என்பது கலவைச் சொல்லாகும். இது தொடர்பாக பாரபட்சமற்ற அனைத்துலக வரலாற்று ஆய்வாளர்கள் , போலி வரலாற்றாய்வாளர்களுடன் விவாதம் செய்து உண்மையைக் கண்டறிய வேண்டும். இத்தகைய போலி வரலாற்று ஆய்வாளர்களால் முன்வைக்கப்பட்ட போலி வரலாற்றுப் பதிவுகளை அழிப்பதற்கு ஒரு மணித்தியாலம் கூடத் தேவையில்லை. இத்தகைய கற்பனையான கருத்துக்களை இல்லாதொழிப்பதற்கு முன்னாள் பௌத்த திராவிடன் ஒருவனை உருவாக்க வேண்டியிருக்கும்.

வடக்கில் சிங்களவர்களை நான் அனுமதிக்க விரும்பவில்லை என சரத் தெரிவித்திருந்தார்.

**முதலமைச்சர்:**

இதுவும் பிழையான கருத்தாகும். நான் வடக்கு மற் றும் கிழக்கில் இடம் பெறும் திட்டமிட்ட அரச கொலனித்துவங்களையே எதிர்க்கின்றேன். வவுனியாவில் 75 ஆண்டுகளுக்கு மேல் வாழும் சிங்களவர்கள் உள்ளனர்.

நிச்சயமாக இவர்கள் வடக்கின் மக்களாவர். வவுனியாவிலிருந்து வடக்கு மாகாண சபையில் அங்கம் வகிக்கும் இரண்டு சிங்கள சகோதர உறுப்பினர்களுக்காக மாகாண சபையில் வழங்கப்படும் அனைத்து ஆவணங்களையும் பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் சிங்களத்தில் மொழிபெயர்த்து அவர்களிடம் வழங்குகிறோம். நாங்கள் சிங்கள சகோதரர்களை அன்புடனும் மதிப்பிடனும் நடத்துகிறோம். வீரசேகர தனது மனதில் வைத்திருக்கும் இராணுவ மனவோட்டங்களை அழித்துக் கொள்ள வேண்டும்.

போர்வீரர்களை போர்க்குற்றங்களை இழைத்தவர்களாகக் குற்றம்சாட்டுவதாக சரத் கூறியிருக்கிறார்.

போர்க் குற்றங்களை இழைத்தவர்கள் போர்க் கதாநாயகர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனர் என்பது எமது தலைவர்களின் இன்றைய துயரநிலையாகும். குற்றவாளிகள் வீரர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். ★

வழிமூலம் - ceylon today
மொழியாக்கம் –நித்தியபாரதி

காலைக்கதிர்
Kalaikkathir



தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா





# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?”

**இருப்பினும் காங்கிரஸ், முதலாளித்துவ அபிவிருத்தி நலன்களை முன்னிட்டு மிகப்பெரிய *ஜமீன்தாரி* (நிலப்பிரபுத்துவ) நிலவுடைமைகளை ஒழிப்பது போன்ற சிறியளவிலான சீர்திருத்தங்களை மேற்கொண்டது. மேலும் போர்க்குணமிக்க தொழிலாளர் போராட்டங்களையும், சமூக அமைதியின்மையையும் எதிர்கொள்வதில் வரம்புக்குட்பட்ட சமூக நலன்புரி ஒதுக்கீடுகளை உருவாக்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானது.**

ஆனால் 1991 இல், இந்திய முதலாளித்துவத்தை இறக்குமதி - பதிலீடு மற்றும் பரந்த அரசு உடைமை மூலமாக ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட முதலாளித்துவ அரசுத் தலைமையிலான வளர்ச்சித்திட்டம் வீழ்ச்சியடைந்தது. இந்நிலையில், சர்வதேச நாணய நிதியத்துடன் நெருக்கமான இணக்கத்துடன் பணியாற்றி, இந்திய உயரடுக்கு ஒட்டுமொத்தமாக நவ - தாராளவாதக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தத் தொடங்கியது. கட்டுப்பாடுகளை நீக்குதல், தனியார்மயமாக்கல், பெருவணிகத்துக்கும் செல்வந்தர்களுக்கும் வரி வெட்டுக்கள், மானியங்களைத் திரும்பப் பெறுதல், பொது சேவைகளைக் குறைத்தல் போன்றன.


அப்போதிலிருந்து, வருமான சமத்துவமின்மை அதிவேகமாக உயர்ந்துள்ளது. அதேசமயம் பெரும்பான்மையான மக்கள் இன்னும் வறுமையில் சிக்கியும், மேலும் பொது மற்றும் சமூக சேவைகளை நீக்குவதன் காரணமாக அதிகரித்த அளவிலான பொருளாதார பாதுகாப்பின்மைக்கு முகம் கொடுத்தும் வருகின்றனர்.

பின்வரும் மூன்று வரைபடங்கள் 1951 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியிலும் அடுத்தடுத்த தசாப்தங்களிலும் இருந்த முரண்பட்ட போக்குகளைக் காட்டுகின்றன.





முதல் வரைபடம், 1980 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் ‘நடுத்தர 40 சதவீதத்தினருக்கு’ கூட்டு வருமானம் 45 சதவீதத்துக்குச் சற்றுக் கூடுதலாக அதிகரிப்பதை காட்டுகிறது. அதேசமயம் உச்ச 10 சதவீதத்தினரின் கூட்டு வருமானம் கிட்டத்தட்ட 37 சதவீதமாக இருந்ததில் இருந்து 1951 ஆம் ஆண்டில் 30 சதவீதத்துக்குக் குறைந்தது. 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இரண்டு போக்குகளும் தலைகீழாக மாறின. 2014 ஆம் ஆண்டில் மொத்த வருவாயில் 55 சதவீதத்துக்கும் மேலான வருமானத்தை உச்ச 10 சதவீதத்தினர் பெற்றுக்கொண்டனர். அதாவது, 1980 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் இருந்த அவர்களது பங்கை விட அநேகமாக இரு மடங்காக உயர்ந்தது. அதேசமயம் நடுத்தர 40 சதவீதத்தினரின் பங்கு 30 சதவீதத்துக்குச் சற்றுக் கூடுதலாக வீழ்ச்சியடைந்தது.

‘இந்தியாவில் 50 சதவீதத்துக்குக் கீழுள்ளவர்களின் வருவாய் பங்கீடு: 1951 - 2014’ என்ற இந்த இரண்டாவது வரைபடம், 1980 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் அடிமட்ட 50 சதவீதத்தினரின் கூட்டு வருமானப் பங்கீடு கிட்டத்தட்ட 23 சதவீதத்தை அடைந்து, பின்னர் தீவிரமாக வீழ்ச்சி அடைந்தது. அதிலும் குறிப்பாக 2000 ஆம் ஆண்டுக்கு பின்னர், 2014 ஆம் ஆண்டில் வெறும் 15 சதவீதமாக வீழ்ச்சியடைவதையும் காட்டுகிறது.




மூன்றாவது மற்றும் கடைசி வரைபடம் 1922 ஆம் ஆண்டில் இருந்த முதல் ஒரு சதவீதத்தினருக்கான வருமானப் போக்கைக் காட்டுகிறது.




சான்செல்லும், பிக்கெட்டியும் அவர்களது முக்கிய முடிவுகளை பின்வருமாறு சுருக்கமாக வழங்கினர்:

1. நாற்பதுகளின் ஆரம்பத்தில் சமத்துவமின்மையில் குறிப்பிடத்தக்க குறைவு ஏற்பட்டது.

2. 1950 ஆம் ஆண்டில் இருந்து 1980 ஆம் ஆண்டுகளின் முற்பகுதி வரை உயர்ந்தபட்ச வருமானப் பங்குகளில் குறிப்பிடத்தக்க குறைப்பு இருந்தது. ஆனால், 80 ஆம் ஆண்டுகளின் மத்தியில் இருந்து ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இருந்தது.

3. சமகாலத்திய இந்தியாவில் வருமான சமத்துவமின்மை சுதந்திரத்துக்கு முந்தைய காலத்தின் பிற்பகுதியின் போது இருந்ததைவிட மிக அதிகமாக உள்ளது. மேலும், குறைந்தபட்சம் ஒரு நூற்றாண்டில் மிக அதிகமாக உள்ளது.

தொடர்ந்து, ஆசிரியர்கள் இந்திய நடுத்தர வர்க்கத்தினர் என அழைக்கப்படுபவர்கள் பற்றி பின்வரும் உறைக்கத்தக்க கருத்துக்களை முன் வைக்கின்றனர்:

‘‘இந்த முடிவு, ‘இந்திய நடுத்தர வர்க்கத்தின் எழுச்சி’ எனக் கூறப் பட்டதைச் சிறப்பாகக் குணாம்சப் படுத்த நமக்கு உதவ வேண்டும். நமது புதிய வருமான சமத்துவமின்மைத் தரவுத் தொகுப்பின் கண்ணோட்டத்தில் இருந்து, ‘ஒளிரும் இந்தியா’ என்பது மக்கள் தொகையில் *நடுத்தர 40 சதவீதத்தினரைக் காட்டிலும் உச்ச 10 சதவீதத்தினருக்கே (2014 ஆம் ஆண்டில் தோராயமாக இருந்த 80 மில்லியன் வயதுவந்த தனி நபர்கள்)* பொருந்தும். ஒப்பீட்டளவில் பேசுகின்றபோது, நடுத்தர 40 சதவீத குழுவினருக்கான ஒளிரும் தசாப்தங்கள் என்பது, 1951 - 1980 காலத்துக்குப் பொருந்தியது. அப்போது கடந்த நாற்பது வருடங்களில் அவர்கள் அடைந்ததை விட, ஒட்டுமொத்த வளர்ச்சியில் (49 சதவீதம்) உயர்ந்த அளவிலான பங்கை கைப்பற்றினர். *1980 ஆம் ஆண்டுகளின் முற்பகுதிகளில் இருந்து, அடைந்த வளர்ச்சி உச்ச 10 சதவீத குழுவினரிடையே கூட மிகவும் சமமற்ற முறையில் பகிரப்பட்டது.*’’

**சீனா கிழக்கு ஐரோப்பாவில் பில்லியன்களை முதலீடு செய்வது, ஜேர்மனி உடனான பதற்றங்களை அதிகரிக்கிறது**

கிழக்கு ஐரோப்பாவில் சீன முதலீடுகள் ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து பலமான விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளன. விரைவாக விரிவடைந்து வரும் அந்த ஆசிய பொருளாதார சக்தியைக் குறிப்பாக ஜேர்மனி ஒரு பங்காளி என்பதைக்காட்டிலும் ஒரு போட்டியாளராக காண்கிறது.

16+1 கூட்டுறவு அமைப்பு எனப்படுவதன் ஆறாவது உச்சிமாநாடு புடாபெஸ்டில் நடந்தது. அதில் சுமார் ஆயிரம் தொழிலதிபர்கள் உட்பட சீன பிரதமர் லி கெக்கியாங்கும் கலந்துகொண்டனர்.

கிழக்கு ஐரோப்பாவிற்கான முதலீடுகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களுக்கு 3 பில்லியன் டொலர் வழங்கலீ பொறுப்பேற்றுக் கொண்டார். அவர் ஹங்கேரிய பிரதமர் விக்டொர் ஓர்பன் உடன் மட்டுமே 11 இருதரப்பு உடன்படிக்கைகளில் கையெழுத்திட்டார்.

**2012 இல் ஸ்தாபிக்கப்பட்ட 16+1 கூட்டுறவு அமைப்பு சீனா மற்றும் முன்னாள் சோவியத் - செல்வாக்கில் இருந்த கிழக்கு அணி நாடுகளை உள்ளடக்கியதாகும். அதில் பங்கு வகிக்கும் ஐந்து பால்கன் நாடுகளைத் தவிர, பதினாறு நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்திலும் அங்கத்துவ நாடுகளாக உள்ளன.**

கிழக்கு மற்றும் மத்திய ஐரோப்பிய நாடுகளுடனான சீனக் கூட்டுறவு (CEEC), சீனாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையிலான வர்த்தகப் பாதைகளை ஒட்டிப் போக்குவரத்து மற்றும் பொருளாதாரத் திட்டங்களில் பெரும் முதலீடுகளை உள்ளடக்கி உள்ள ‘ஒரே இணைப்பு, ஒரே பாதை’ (OBOR) என்று அறியப்படும் அதன் புதிய பட்டுச் சாலை மூலோபாயத்தின் பாகமாக உள்ளது.






புடாபெஸ்டில் இருந்து சேர்பிய தலைநகரம் பெல்கிராட் வரையில் ஒரு புதிய ரயில் இணைப்பைக் கட்டமைக்கும் திட்டம், இந்தவார உச்சி மாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்ட மிக முக்கியமான திட்டமாக இருந்தது. அந்த 2.1 பில்லியன் டொலர் திட்டத்தின் எண்பத்தி ஐந்து சதவீதத்துக்கு, சீன ஏற்றுமதி - இறக்குமதி வங்கி (Exim Bank) நிதியுதவி வழங்கும். இது, சீனக் கப்பல் கட்டுதல், பழுதுபார்த்தல், தளவாடங்கள் விநியோகித்தல் நிறுவனமான Cosco வின் மிகப்பெரும் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிரேயுஸ் கிரேக்கத்துறை முகத்தையும் ஐரோப்பிய ரயில் வலையமைப்பையும் இணைக்கும். இது தவிர பால்கன்களின் ரயில் மற்றும் சாலைத் திட்டங்களுக்கும் சீனா நிதி வழங்க உள்ளது.

(கேள்வி தொடரும்...)

## மூடப்படும் அபாயத்தில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்!



கொழும்பு, டிசெ. 11
இலங்கையின் தேசிய விமான சேவையான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மூடப்படும் நிலைக்குச் செல்லலாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பெரிய கடன் செலுத்துகைத்திட்டத்தில் இருந்து மீளாத சந்தர்ப்பத்தில் இது நடந்தே தீரும் என்று மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இதனைத்தடுக்க திரவத்தன்மை பங்குதாரரை கவரவேண்டும், அல்லது அரசு நிதியில்லாமல் புத்தூக்க நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஏற்கனவே, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், அரச வங்கிகளிடம் இருந்து பெற்ற பெரிய தொகை கடன்களை இன்னும் மீளச் செலுத்தவில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் செலவீனக் கட்டுப்பாட்டை மேற்கொள்ள வேண்டுமானால், உயர் மட்டத்தில் அதிகளவான சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரிகள் மட்டத்தில் அது செயற்படுத்தப்பட வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

(க)

# இலங்கையின் அபிவிருத்திக்கு செல்வாக்கான தலைமை அவசியம்!



## கோட்டா கூறுகிறார்

இலங்கையின் அபிவிருத்திக்கு நடைமுறை, நம்பிக்கை மற்றும் செல்வாக்குள்ள தலைமைத்துவம் அவசியம்.

நாட்டின் வலுவான மற்றும் உண்மையான தலைமைத்துவத்தின் தேவை ஏற்பட்டுள்ளது என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டா பய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டி அபயராமய விகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு, ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிடலாம் என்று ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படப் போபவர் யார் என்று ஐந்து அரசியல்வாதிகளின் பெயர்களை முன்னிலைப்படுத்தி கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஊடகப்பிரிவு கருத்துக் கணிப்பு ஒன்றை அண்மையில் நடத்தி இருந்தது.

கருத்துக்கணிப்பின் முடிவில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவே ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படுவார் என்று அதிகமானவர்கள் கூறியிருந்தனர். 18 தொடக்கம் 35 வயது வரையான 505 பேரிடம் இந்த விசேட கருத்துக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதில், கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் சஜித் பிரேமதாஸ, ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட ஐவரின் பெயர்கள் முன்னிலைப் படுத்தப்பட்டன.

இதன்படி 39.18 வீத மானவர்கள் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(க)

## 50 பவுண் நகைகள் யாழ். பிரவுண் வீதியில் நேற்றுத் திருட்டு!

யாழ். பிரவுண் வீதிப் பகுதியில் 50 பவுண் தங்க நகைகள் திருட்டுப்போயுள்ளன. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற் றுள்ளது.

வீட்டின் உரிமையாளர்கள் நேற்றைய தினம் தேவாலயத்திற்குச் சென்றிருந்த நிலையில் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(க)

## சிறுமியை துஷ்பிரயோகப்படுத்த முயற்சி; இளைஞரை மடக்கிப் பிடித்தனர் மக்கள்!

கொழும்பு, டிசெ. 11
தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை நகரத்துக்கு, பிரத்தியேக வகுப்புக்காக சென்று வீடு திரும்பிக்கொண்டிருந்த 14 வயதுச் சிறுமி ஒருவரை, பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த முயற்சித்த இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த இளைஞரை மடக்கிப் பிடித்த பிரதேச மக்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்தபோதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தலவாக்கலை கூம்மூட் பகுதியைச் சேர்ந்த 14 வயது சிறுமியொருவர், நேற்றுமுன்தினம் நண்பகல் தலவாக்கலை நகருக்கு பிரத்தியேக வகுப்பிற்காகச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தார். அவ்வேளையில் அந்த சிறுமியை பின் தொடர்ந்த 30 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் அந்தச் சிறுமியை துஷ்பிரயோகப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது சிறுமி சத்தத்துடன் அழுது சத்தமிட்டுள்ளார். இதனால், இளைஞன் தப்பியோட முயற்சித்துள்ளார்.

அப்போது அந்த வழியே வந்த ஓட்டோ ஓட்டுநர் ஒருவர், சிறுமியின் கூக்குரலைக்கண்டு ஓட்டோவை நிறுத்திவிட்டு பிரதேச மக்களை கூக்குரலிட்டு அழைத்துள்ளார்.

உடனடியாக அவ்விடத்தில் திரண்ட பிரதேச மக்கள், தப்பியோட முயற்சித்த அந்த இளைஞனை தலவாக்கலை நகரசபைக்கு பின்னாலுள்ள வீதியோரத்தில் வைத்து மடக்கிப் பிடித்து தலவாக்கலை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அந்த இளைஞன், நுவரெலியா கந்தப்பளை பிரதேசத்தை சேர்ந்தவரென வும் இவர் பல தடவைகள் இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்ததாகவும்பொலிஸாரின்ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த இளைஞனைக் கைது செய்த தலவாக்கலை பொலிஸார் வழக்குப் பதிவு செய்து நுவரெலியா மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப் படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக தலவாக்கலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (க)

# புதிதாக உதயமாகிறது முஸ்லிம் கூட்டமைப்பு!





கொழும்பு, டிசெ. 11
இலங்கை முஸ்லிம் மக்களின் நீண்டகால அபிலாஷைகளை நிவர்த்தி செய்வதை நோக்காகக்கொண்டு முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஓரணியில் திரளவேண்டும் என்ற நீண்ட கால கோரிக்கைக்கு அமைவாக, முஸ்லிம் கூட்டமைப்பு ஒன்று உதயமாகிறது எனத்தகவல் கிடைத்துள்ளது.

இந்தக் கூட்டமைப்பை அறிவிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு கொழும்பில் இடம்பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் ரிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், எம்.ரி. ஹசன் அலி மற்றும் பசீர் சேகுதாவூத் ஆகியோர் பிரதிநிதித்துவம் செய்யும் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் ஒன்றிணைந்தே இந்தப் புதிய கூட்டமைப்பு பிரகடனப்படுத்தவுள்ளது.

சிறுபான்மை சமூகமான தமிழர்களின் நலனுக்காக, பல தமிழ்க் கட்சிகள் பகை மறந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஓரணியில் திரண்டிருக்கின்றமையைப் போல முஸ்லிம் கட்சிகளும் ஒரு கூட்டமைப்பாக உருவாக வேண்டும் என்ற கோரிக்கை மிக நீண்ட காலமாக முஸ்லிம், சிவில் சமூகத்தால் முன்வைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனை நிறுவுவதற்காக முஸ்லிம் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதும் ஒருசில முஸ்லிம் கட்சிகள் மட்டுமே அதற்கு இணக்கம் தெரிவித்தன.

அந்த அடிப்படையிலேயே முதற்கட்டமாக இரு கட்சிகளை உள்ளடக்கிய ஒரு முஸ்லிம் கூட்டமைப்பு நிறுவப்படுவதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

(க)

# மோடியின் அரசை விளம்பரப்படுத்த 3 ஆண்டுகளில் ரூ.3,700 கோடி செலவு

## ராகுல் கண்டனம்



பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசின் விளம்பரங்களுக்கு மக்கள் வரிப்பணத்தில் இருந்து 3ஆயிரத்து 700 கோடி ரூபாய்செலவிடப்பட்டதற்கு ராகுல் காந்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

பட்டான் மாவட்டத்துக் குட்பட்ட ஹரிஜ் பகுதியில் நேற்றுமுன்தினம் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் ராகுல் காந்தி பேசியவை வருமாறு:-

ரபேல் போர் விமான ஊழல், ஜெய் ஷா ஊழல் விவகாரத்தில் இருந்து மோடியால் தப்ப முடியாது. சமீபத்தில் கிடைத்த தகவலின்படி மோடியின் அரசை விளம்பரப்படுத்த 3ஆயிரத்து 700 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இந்த அரசின் பணம் எல்லாம் அவர்களின் செல்வாக்கைத் தூக்கி நிறுத்தவும் தொழிலதிபர்களைப் பாதுகாக்கவும்தான் பயன்படுத்தப்படுகிறது. எங்கள் ஆட்சியில் இந்தப் பணம் மக்களின் ஆரோக்கியத்துக்காகவும், கல்விக்காகவும் செலவிடப்படும்.

எங்களது ஆட்சியின்போது மகாத்மா காந்தி தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்துக்காக 35 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. ஆனால், பா.ஜ.க. ஆட்சியில் 'நனோ' கார் தொழிற்சாலைக்கு 33 ஆயிரம் கோடி ரூபா அளிக்கப்பட்டுள்ளது. முன்ட்ரா பகுதியில் உள்ள நிலங்கள் கவுதம் அதானிக்கு மீற்றர் ஒரு ரூபாய் விலைக்கு விற்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் மட்டும் 10 பணக்காரர்களுக்கு மத்திய அரசு 1.30 லட்சம் கோடி ரூபாய் கடன் அளித்துள்ளது. ஆனால், விவசாயிகள் கடன் தள்ளுபடி கேட்டால் அது எங்கள் கொள்கை குறிப்பில் இல்லை என நிதி அமைச்சர் அருண் ஜெட்லி கூறுகிறார். குஜராத்தில் எங்கள் ஆட்சி அமைந்தால் உடனடியாக விவசாயிகளின் கடன்களைத் தள்ளுபடி செய்வோம். விவசாயிகளின் உற்பத்திக்கான சரியான விலையை வழங்குவோம். - என்று தெரிவித்துள்ளார்.

# பொலிஸ் நடுநிலை தவறினால் நீதிமன்றில் முறையிடுவோம்



## தினகரன் பேட்டி

சென்னை,டிசெ.11

ஆர்.கே.நகரில் பொலிஸார் நடுநிலையுடன் இல்லாவிட்டால் நீதிமன்றில் முறையிடுவோம் என்று டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

கொருக்குப்பேட்டையில் டி.டி.வி. தினகரன் நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

ஆர்.கே.நகர் தொகுதியில் நாங்கள் தேர்தல் பிரசாரம் ஆரம்பித்த 2 நாள்களிலேயே தேர்தல் நிறுத்தப்படும் என்று பா.ஜனதா சொல்வதில் இருந்து அவர்களது வேட்பாளர்கள் கட்டுப்பணம் கூட வாங்கமாட்டார்கள் என்பதை உணர்ந்து கொண்டோம். பா.ஜனதாவுக்கு தோல்விப் பயம் வந்துவிட்டது. அதன் காரணமாகவே தேர்தலை ரத்து செய்ய பா.ஜனதா கட்சியினர் கோருகிறார்கள்.

அவர்களால் விரும்பப் படாத நான் வெற்றிபெற்று விடுவேன் என்பதாலும் இவ்வாறு சொல்லி வருகிறார்கள். தயவு செய்து அவர்கள் மக்களின் மனநிலையை உணர்ந்து பேச வேண்டும்.

ஆர்.கே.நகர் தொகுதி மக்கள் அம்மாவின் அரசாங்கம் மீண்டும் வரவேண்டும் என்பதற்காக இந்தத் தேர்தலிலே குக்கர் சின்னத்தில் வாக்களிக்க தயாராகி விட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

தேர்தல் அதிகாரி பிரவீன் நாயர் நேர்மையான முறையில் தேர்தலை நடத்துவார் என்று நம்புகிறேன். ஆர்.கே.நகரில் காவல் துறையினர் நடுநிலையுடன் நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நீதிமன்றில் முறையிடுவோம் என்றும் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் 'ஓக்கி' புயலால் ஆயிரம் கோடி ரூபா சேதம்!

சென்னை,டிசெ.11

தமிழகத்தில் 'ஓக்கி' புயலால் ஆயிரம் கோடி ரூபாக்கு மேல் சேதம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஓக்கி புயலால் குமரி மாவட்டம் பெரும் பாதிப்பைச் சந்தித்தது. நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களிலும் சேதங்கள் ஏற்பட்டன.



கன்னியாகுமரி மாவட்டத்தில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மின் கம்பங்கள், லட்சக்கணக்கான வாழைகள், ஆயிரக்கணக்கான தென்னை மரங்கள் முறிந்து விழுந்தன. வீதிகளும் சேதம் அடைந்தன. இதுபோல கடற்கரை கிராமங்களில் மீனவர்களின் படகுகள் மீன் பிடி உபகரணங்கள் அனைத்தும் உடைந்து நாசமாகியுள்ளன.

இந்தப் பாதிப்புகள் தொடர்பாகக் கணக்கெடுப்பு நடத்த மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கடந்த 5 நாள்களுக்கும் மேலாகக் குமரி மாவட்டத்தில் முகாமிட்டுக் கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட்டனர். அவர்கள் அளித்த தகவலின் பேரில் குமரி மாவட்டத்தில் மட்டும் 170 கோடி ரூபாவிற்கு மேல் சேதம் ஏற்பட்டிருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையே மூத்த அதிகாரி ஒருவர் தமிழகத்தில் ஓக்கி புயல் ஆயிரம் கோடி ரூபாக்கு மேல் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது எனக் கூறியுள்ளார்.

# களை கட்டத் தொடங்கியுள்ள ஆர்.கே.நகர் தேர்தல் களம்

சென்னை, டிசெ. 11

ஆர்.கே.நகர் தொகுதிக்கு வருகிற 21 ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அந்தத் தொகுதிகளை கட்டத் தொடங்கியுள்ளது.

ஆர்.கே.நகர் இடைத் தேர்தலில் இறுதிப் பட்டியல் வெளியானதைத் தொடர்ந்து தேர்தல் பிரசாரம் சூடு பிடித்துள்ளது. நடிகர் விஷால் வேட்பு மனுத் தள்ளுபடி செய்யப்பட்டது உச்சக்கட்டத் திருப்பமாக அமைந்தது. விஷால் முறைப்பாடு தொடர்பாக தேர்தல் நடத்தும் அதிகாரி வேலுச்சாமி மாற்றப்பட்டு பிரவீன்நாயர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதுபோன்ற அடுத்தடுத்த நடவடிக்கைகளால் தேர்தல் களம் களைகட்டத் தொடங்கியுள்ளது. மொத்தம் 59 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

தேர்தல் விதிமீறல்களைத் தடுக்கச் சிறப்பு பார்வையாளர்களை இந்திய தேர்தல் ஆணையம் நியமித்துத் தீவிரமாகக் கண்காணித்து வருகிறது.

இதற்கிடையே தேர்தல் ஏற்பாடுகளும் தீவிரமாக நடந்து வருகின்றன. தேர்தலை நடத்துவதற்காக ஆயிரத்து 800 வாக்குச்சாவடி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். மாநகராட்சியில் பணியாற்றும் வருவாய்த் துறை அதிகாரிகளும், ஊழியர்களும் இதற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு வாக்குச் சாவடி மற்றும் வாக்குப்பதிவுப் பணிகள் தொடர்பாகப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

தேர்தலை அமைதியாகவும், சுமுகமாகவும் நடத்துவதற்காக பாதுகாப்பு ஏற்பாடுகளும் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளன. தொகுதியில் தெருவுக்கு தெரு 300 இடங்களில் கண்காணிப்புக் கமெராக்கள் அமைத்துத் தேர்தல் விதிமீறல்கள் கண்காணிக்கப் பட்டு வருகின்றன.

ஆர்.கே.நகரில் 59 வேட்பாளர்கள் போட்டியிடுவதால் ஒரு வாக்குச் சாவடிக்கு 4 மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்





காக 256 வாக்குச் சாவடிகளிலும் மொத்தம் ஆயிரத்து 200 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகிறது. வாக்குப்பதிவின் போது இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டால் மாற்று இயந்திரங்களும் கூடு தலாக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

# இந்திய இராணுவப் பயிற்சி உலகத் தரமானது:

## பங்களாதேஷ் இராணுவத் தளபதி

இந்திய இராணுவப் பயிற்சி உலக தரமானது என்று அங்கு தேர்ச்சி பெற்று வெளியேறும் சர்வதேச பயிற்சி இராணுவத்தினருக்கு பங்களாதேஷ் இராணுவத் தளபதி அபு பிலால் முகமது சைபுல் ஹக் தெரிவித்துள்ளார்.

உத்தரகண்ட் மாநிலம், டேக்ராடூனிலுள்ள இந்திய இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் தேர்ச்சி பெற்ற 78 நட்பு நாடுகளைச் சேர்ந்தவர்கள் உட்பட 487 பயிற்சி இராணுவத்தினரின் பயிற்சி நிறைவு அணிவகுப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பங்களாதேஷ் இராணுவத் தலைமை தளபதி அபு பிலால் முகமது சைபுல் ஹக் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். பயிற்சி முடித்த இராணுவ வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட அவர் இந்திய இராணுவப் பயிற்சி முறை பற்றிப் பெருமையாகப் பேசினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு:-

இங்கு பெற்ற இராணுவப் பயிற்சியின் மீது அனைத்து வீரர்களும் நம்பிக்கை வைக்க வேண்டும். அந்த நம்பிக்கையின் அடிப்படையில், உங்களுடைய நாட்டுக்காக உயிரையும் கொடுத்துப் பணியாற்ற வேண்டும். இந்திய இராணுவப் பயிற்சித்தரம் மிகவும் சிறப்பானதாக இருக்கும். அந்தப் பயிற்சியின் மூலம், உங்களது இராணுவத்துக்காக நீங்கள் மிகச் சிறந்த முறையில் பணியாற்ற முடியும்.

இராணுவவீரர்களின் பணி என்பது சவால்கள் நிறைந்ததாகும். அந்தச் சவால்களின் மூலம் பாடம் கற்று, அர்ப்பணிப்பு, உறுதிப்பாடு, கடும் உழைப்பு ஆகியவற்றைத் துணையாகக் கொண்டு வீரர்கள் செயற்படவேண்டும். பங்களாதேஷ் விடுதலைக்காகதங்களது இன்னுயிரைத் தியாகம் செய்த இந்திய இராணுவ வீரர்களுக்கு எனது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# ஜேர்மனியில் ரூ.105 கோடிக்கு ஏலத்தில் விற்கப்பட்ட கிராமம்

பெர்லின்,டிசெ.11

ஜேர்மனி தலைநகர் பேர்லின் அருகே அல்வின் என்ற சிறிய கிராமம் ஏலம் மூலம் 105 கோடி ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது.

ஜேர்மனியில் பிரன்டன்பர்க் மாநிலத்தில் அல்வின் என்ற சிறிய கிராமம் உள்ளது. தனியார் வசம் உள்ள இக்கிராமம் நேற்று முன்தினம் ஏலம் மூலம் விற்கப்பட்டது.

தொடக்கத்தில் அதை 85 லட்சம் ரூபாவிற்கு ரியல்எஸ்டேட் உரிமையாளர் கர்குசேன்




என்பவர் ஏலம் கேட்டார் பின்னர் படிப்படியாக உயர்த்தப்பட்டு முடிவில் அந்த கிராமம்.105 கோடி ரூபாவிற்கு விற்பனை ஆனது.

இந்தக் கிராமத்தில் தற்போது 20 பேர் மட்டுமே உள்ளனர். இவர்கள் அனைவரும் முதியவர்கள். பெரும்பாலான வீடுகள் இடிந்த நிலையில் உள்ளன. இக்கிராமம் தலைநகர் பேர்லினில் இருந்து 120 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது.

இரு பிரிவாக இருந்த ஜேர்மனி கடந்த 1990ஆம் ஆண்டு அதாவது 27 ஆண்டுகளுக்கு முன்பு ஒன்றாக இணைந்தது. முன்பு அது கம்யூனிஸ்ட் ஆட்சி நடைபெற்ற கிழக்கு ஜேர்மனியில் இருந்தது.

இங்கு ஒரு தொழிற்சாலை இருந்தது. ஜேர்மனி இணைந்ததும் இங்கிருந்தவர்கள் மேற்கு ஜேர்மனி நகரங்களுக்குச் சென்று விட்டனர். இதனால் அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டது எனவே, இந்த கிராமம் மக்கள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடி விட்டது. (ு)




# 2018 ஆம் ஆண்டின் நிறமாக ஊதா தேர்வு

நியூ ஜெர்சி,டிசெ.11

பன்ரன் அமைப்பின் சார்பில் 2018ஆம் ஆண்டுக்கான அதிகார பூர்வமான நிறமாக ஊதா நிறம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூ ஜெர்சியில் பன்ரன் என்ற நிறுவனம் ஒன்று இயங்கிக் கொண்டு இருக்கிறது. வண்ணங்கள் சம்பந்தமான நிறைய ஆராய்ச்சிகளையும், கண்டுபிடிப்புகளையும் இந்த நிறுவனம் வெளியிட்டு வருகிறது. மேலும் வர்ணத்தில் தொடங்கி எழுதும் கலர் பென்சில்கள் வரை தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

இந்த நிறுவனம் ஒவ்வோர் ஆண்டும் அதிகார பூர்வமான நிறம் அறிவிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளது. 2010இல் இருந்து இந்த நடைமுறை வழக்கத்தில் இருக்கிறது. இந்த நிறத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக உலகில் இருக்கும் முக்கியமான நாடுகள் அனைத்தில் இருந்தும் சில நபர்கள் அழைக்கப்படுவார்கள். அவர்களின் சந்திப்பு யாருக்கும் தெரியாத இடத்தில் ரகசியமாக நடைபெறும். மேலும் யாரெல்லாம் கலந்து கொள்கிறார்கள் என்பதும் ரகசியமாக வைக்கப்படும். பின் டிசெம்பர் மாதத்தில் சரியாக நிறத்தைத் தேர்வு செய்துவிட்டு அறிவிப்பை வெளியிடுவார்கள்.

இந்த நிலையில் 2018 ஆம் ஆண்டுக்கான அதிகாரபூர்வ நிறத்தை அந்த நிறுவனம் தற்போது அறிவித்துள்ளது. அதன்படி, அந்த நிறுவனம் ஊதா நிறத்தை இந்த ஆண்டின் நிறமாகத் தேர்வு செய்து இருக்கிறது. இந்த நிறம் செல்வ வளத்தைக் குறிக்கும் என்பதாலும், வரு கிற ஆண்டு அதிக செல்வச் செழிப்புடன் இருக்க வேண்டும் என்பதற்காகவும் இந்த நிறம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டின் அதிகாரபூர்வ நிறமாகப் பச்சை நிறம் தேர்வு செய்யப்பட்டிருந்தது. இந்த நிறம் உலகில் மாசுபாட்டின் அளவை குறைக்கும் நோக்கில் தேர்ந்தெடுக்கப்பட்டு இருந்தது. மேலும் பச்சை நிறம் புதிய தொடக்கத்தை குறிக்கும் என்பதாலும் இந்த நிறம் தேர்வு செய்யப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடியிலிருந்து ஈராக்கை முழுமையாக மீட்டுவிட்டோம்

பாக்தாத்,டிசெ.11

ஈராக் நாட்டை ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடியில் இருந்து முழுமையாக மீட்டு விட்டோம் என ஈராக் பிரதமர் ஹைதர் அல் அபாடி அறிவித்துள்ளார்.

சிரியா மற்றும் ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆதிக்கம் மேலோங்கி இருந்தபோது ஈராக்கில் உள்ள மொசூல் மற்றும் அதைச் சுற்றியுள்ள நகரங்கள் அவர்களது கட்டுப்பாட்டில் இருந்தது. தாங்கள் கைப்பற்றிய பகுதிகளைத் தனி நாடாக அறிவித்து ஆட்சிசெய்து வந்தனர்.

அவர்களின் ஆதிக்கத்தை ஒடுக்க ஈராக் இராணுவத்துக்கு அமெரிக்கா கை கொடுத்தது. அமெரிக்க விமானப் படையின் உதவியுடன் ஐ.எஸ். தீவிரவாதிகள் வசம் இருந்த மொசூல் நகரம் சமீபத்தில் முழுமையாக மீட்கப்பட்டது.

அதை தொடர்ந்து தீவிரவாதிகள் வசம் இருந்த மேலும் சில நகரங்கள் படிப்படியாகக் கைப்பற்றப்பட்டன. இந்த நிலையில் அவர்கள் வசம் இருக்கும் கடைசி நகரமான தல் அபர் பகுதியை மீட்கத் தாக்குதல்



பிரதமர் அபாடி அறிவிப்பு



நடத்துமாறு ஈராக் இராணுவத்துக்கு அந்நாட்டின் பிரதமர் ஹைதர் அல்–அபாடி கடந்த ஓகஸ்ட் 20ஆம் திகதி உத்தரவிட்டார்.

இந்த நிலையில், ஈராக் நாட்டை ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடியில் இருந்து முழுமையாக மீட்டு விட்டோம் என ஈராக் பிரதமர் ஹைடர் அல்– அபாடி நேற்று அறிவித்துள்ளார். இதே கருத்தை இராணுவ முப்படைத் தளபதிகளும் வெளியிட்டுள்ளனர். (ு)

# ஜனாதிபதி ட்ரம்ப் சீற்றம்; ஆத்திரம்; மன்னிப்புக் கோரினார் பத்திரிகையாளர்



அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் அதிபர் ட்ரம்ப் கலந்து கொண்ட கூட்டம் தொடர்பாகத் தவறான புகைப்படம் பதிவிட்ட பத்திரிகையாளர் அவரிடம் மன்னிப்புக் கேட்டுள்ளார்.

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள பென்சாகோலா என்ற இடத்தில் அதிபர் ட்ரம்ப் நேற்று முன்தினம் ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார். இந்தக் கூட்டத்தில் ஆளே இல்லாதது போன்ற புகைப்படம் ஒன்றை வொஷிங்டன் போஸ்ட் நாளிதழின் பத்திரிகையாளர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டு இருந்தார்.

இதனை ஆத்திரத்துடன் கண்டித்துள்ள அதிபர் ட்ரம்ப், கூட்டத்திற்கு நான் வருவதற்கு முன்னர் எடுத்த புகைப்படம் பதிவிடப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான பேர் உள்ளே வருவதற்குக் காத்துக் கொண்டு இருந்தனர். பொய்யான செய்தியைக் கொடுத்ததற்கு மன்னிப்பு கோர வேண்டும் என்றும் அவரை வொஷிங்டன் போஸ்ட் இதழ் பணி நீக்கம் செய்ய வேண்டும் என்றும் கடுமையான வார்த்தைகளால் டுவிட்டரில் பதிவிட்டிருந்தார்.

இதனையடுத்து, சம்பந்தப்பட்ட பத்திரிகையாளர் ட்ரம்பிடம் மன்னிப்புக் கோரியுள்ளார். மேலும், அந்தப் புகைப்படத்தை தனது டுவிட்டர் பக்கத்தில் இருந்தும் நீக்கியுள்ளார்.

## ஜெருசலேம் விவகாரம்:

# அமெரிக்காவின் முடிவை நிராகரித்தது ஐ.நா. சபை

இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரித்து அமெரிக்கா எடுத்துள்ள முடிவை ஏற்கமுடியாது என்று கூறியுள்ள ஐ.நா. பாதுகாப்புச் சபை, அம்முடிவை நிராகரிப்பதாக அறிவித்துள்ளது.

இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரித்துள்ள அமெரிக்கா உலக அளவிலான எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளது. ஒட்டு மொத்த அரபு நாடுகள் மட்டுமல்லாது ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளும் எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளன. இது தொடர்பாக விவாதிப்பதற்காக ஐ.நா பாதுகாப்புச் சபை அவசரக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

15 நாடுகள் உறுப்பினர்களாக உள்ள இந்த சபையில் அமெரிக்காவின் முடிவுக்கு எதிராக 14 நாடுகள் வாக்களித்தன. ஜெருசலேம் தொடர்பான தீர்மானங்கள் இதற்கு முன்னர் பாதுகாப்பு சபையில் நிறைவேறியுள்ள நிலையில், அமெரிக்காவின் அறிவிப்பு அதற்கு விரோதமாக உள்ளது என எதிராக வாக்களித்த நாடுகள் விமர்சித்தன.

கிழக்கு ஜெருசலேம் பலஸ்தீனின் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி, ஒருங்கிணைந்த ஜெருசலேம் நகரம் இஸ்ரேல் – பலஸ்தீனின் கூட்டுத் தலைநகராக இருக்க வேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடு என்று ஐ.நா. வுக்கான பிரிட்டன் தூதர் மத்யூரைக்ராப்ட் கூறினார்.



இந்த நிலையில் இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரித்து அமெரிக்கா எடுத்துள்ள முடிவை ஏற்கமுடியாது என்று கூறியுள்ள ஐ.நா. பாதுகாப்பு சபை, அமெரிக்காவின் முடிவை நிராகரிப்பதாகவும் அறிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



# உபாதையிலிருந்து மீண்டு வந்த அசேலவின் அடுத்த எதிர்பார்ப்பு




இலங்கை கிரிக்கெட் அணியில் அண்மைக்காலமாக ஜொலித்து வருகின்ற நட்சத்திர வீரராக, 31 வயதுடைய சகலதுறை ஆட்டக்காரரான அசேல குணரத்ன விளங்குகின்றார். இதில் இவ்வருடம் நடைபெற்ற இலங்கை கிரிக் கெட் விருது வழங்கும் விழாவில் ஆண்டின் நம்பிக்கைக்குரிய வீரர் உள்ளிட்ட 3 முக்கிய விருதுகளையும் அவர் தட்டிச் சென்றார். இவற்றுக் கெல்லாம் அவருடைய அண்மைக்கால திறமைகள் மற்றும் சாதனைகள் தான் முக்கிய காரணம் எனலாம்.

இதில் இவ்வருட முற்பகுதியில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ரி-20 தொடரில் துடுப்பாட்டத்தில் வாணவேடிக்கை நிகழ்த்திய அசேல, இலங் கைக்கு தொடர் வெற்றியைப் பெற்றுக்கொடுக்க முக்கிய காரணகர்த்தவாக இருந்தார். அதனைத்தொடர்ந்து இங்கிலாந்தில் நடைபெற்ற சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இந்திய அணியுடனான லீக் போட்டியில் இலங்கை அணிக்கு நிர்ணயிக்கப்பட்ட 322 என்ற ஓட்ட இலக்கை அடை வதற்கு 34 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொடுத்த அசேல, இலங்கை அணிக்கு வரலாற்று வெற்றியொன்றையும் பெற்றுக்கொடுத்தார்.

அதனையடுத்து ஒரு மாதங்கள் கடந்து, ஸிம்பாப்வே அணியுடனான ஒற்றை டெஸ்ட் போட்டியில் இலங்கை அணிக்காக அபாரமாக விளையாடி 80 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட அசேல, இலங்கையை வரலாற்று தோல்வியிலிருந்தும் மீட்டெடுத்தார். எனினும், 2 வாரங்களுக்குள் அவர் துரதிஷ்டவசமாக உபாதைக்குள்ளானார்.

காலியில் கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற இந்திய அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியின்போது இலங்கை அணியின் சகலதுறை ஆட் டக்காரரான அசேல குணரத்ன உபாதைக்குள்ளானார். கட்டை விரலில் ஏற்பட்ட முறிவின் காரணமாக அவர் கடந்த 2 மாதங்களாக கிரிக்கெட் அரங்கிலிருந்து ஒதுங்கியிருந்தார்.

இந்த நிலையில், உபாதையிலிருந்து குணமாகிய அசேல, கடந்த மாதம் நடைபெற்ற இலங்கை கிரிக்கெட் கழகம் மற்றும் இராணுவப்படை விளை யாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ப்ரீமியர் எமர்ஜிங் லீக் போட்டியில் களமிறங்கி தனது உடற்தகுதியை நிரூபித்திருந்தார்.

இதனையடுத்து இந்திய அணியுடனான டெஸ்ட் போட்டித் தொடரில் அசேலவுக்கு வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அவருடைய உடற்தகுதியைக் கருத்திற்கொண்டு இந்திய அணியுடனான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட போட்டித் தொடரில் களமிறக்க தெரிவுக்குழுவினர் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இதேவேளை, இலங்கை அணியில் கடந்த 2 மாதங்களாக விளையாட முடியாது போனமை தனக்கு மிகுந்த கவலையை ஏற்படுத்தியது என அசேல தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -

கடந்த 2 மாதங்களும் எனக்கு 4 வருடங்கள் போன்ற உணர்வை ஏற் படுத்தியிருந்தன. அக்காலப்பகுதி எனக்கு மிகவும் கடினமாக அமைந்ததுடன், உபாதையிலிருந்து மீண்டு வருவதற்குக் கடினமாகப் போராடினேன்.

எனக்கு இதற்கு முன்னரும் காயங்கள் ஏற்பட்டிருந்தன, ஆனால் இது போன்ற ஒரு நிலை ஒருபோதும் ஏற்பட்டது இல்லை. முந்தைய காயங்கள், இரண்டு வாரங்கள் அல்லது ஒரு மாதங்களுக்குள் நன்றாகக் குணமடைந்து விடும். ஆனால் இந்த காயம் கடுமையானதாகவும் மிகவும் வேதனை யானதாகவும் உள்ளது.

எனினும், உபாதையுடன் நான் பயிற்சிகளை தொடர்ந்து முன்னெடுத்து வந்தேன். இந்த உபாதை குணமடைவதற்கு குறைந்தது ஒரு வருடம் தேவைப்படும். ஆனால், மருத்துவ ஆலோசனைக்கு அமைய நான் கடுமை யாக உழைத்தேன். இதனால் எதிர்பார்த்ததைவிட விரைவில் உபாதையிலிருந்து மீண்டு வந்து இலங்கை அணிக்குள் இடம்பெறுவதற்கு உதவியது. நான் வாகனம் ஓட்டிக்கொண்டிருந்தாலும், கிரிக்கெட் பந்தொன்றை எடுத்துச் செல்லும் வழக்கமுடையவனாக இருந்தேன்.

ஆனால் எதிர்பார்த்ததை விட விரைவாக நான் உபாதையிலிருந்து குண மடைந்து கிரிக்கெட் போட்டிகளில் மீண்டும் விளையாடுவேன் என்பதை நினைக்கும் போது மிக மகிழ்ச்சியாக உள்ளது.

நான் இன்னும் ஒரு முன்னெச்சரிக்கையாக கட்டைவிரலுக்கு பிளாஸ்டர் மூலம் கட்டுப் போட்டுக் கொண்டுள்ளேன். இந்திய டெஸ்ட் போட்டியில் பந்தை பிடிக்க முற்பட்ட போது கட்டைவிரலுக்கு கீழே, கைவிரல் தோல் ஆறு துண்டுகளாகப் பிளவுபட்டது. எனினும், வைத்தியர்கள் அதற்குப் பொருத்தமான முறையில் சிகிச்சையளித்தனர். ஆனால், உபாதையின் வலியை நான் இன்னும் உணர்கின்றேன். இன்னும் நான்கு மாதங்களுக்கு அந்த இடத்துக்கு எந்தவொரு பாதிப்பும் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். - என்றார்.

இலங்கை அணி விளையாடுவதை தொலைக்காட்சியில் நான் பார்த்தேன், அப்போதெல்லாம் இலங்கை அணி தோல்வியைச் சந்திக்கும் போது மிக வும் கவலையாக இருந்தது. எனினும், உபாதைக்குப் பிறகு மீண்டும் அணி யில் இடம்பிடித்துள்ளமையால் மீண்டும் சிறப்பாக விளையாடுவதற்கு எதிர்பார்த்துள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

# கோஹ்லி திருமணத்துக்கு இரண்டு வீரர்களுக்கு மட்டுமே அழைப்பு



கோஹ்லி திருமணத்துக்கு கிரிக்கெட் உலகிலிருந்து சச்சின் டெண்டுல்கர் மற்றும் யுவராஜ் சிங்குக்கு மட்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளி யாகியுள்ளன. இந்தியக் கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோஹ்லியும், பிரபல நடிகை அனுஷ்கா சர்மாவும் காதலித்து வருகிறார்கள். இருவருக்கும் நாளை 12ஆம் திகதி இத்தாலியின் மிலான் நகரில் திருமணம் நடக்கவுள்ளது.

இது தொடர்பாக அறிவிப்பு எதுவும் அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லை. இந்த நிலையில் திருமணத்தில் கலந்துகொள்பவர்கள் தொடர்பாகப் புதுத் தகவல் கள் தற்போது வெளியாகியுள்ளன. அதாவது, கோஹ்லி சார்பில் கிரிக்கெட் உலகிலிருந்து சச்சின் டெண்டுல்கர் மற்றும் யுவராஜ் சிங்குக்கு மட்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாம்.

அதே போல கோஹ்லிக்கு சிறு வயதில் பயிற்சியளித்த பயிற்சியாளர் ராஜ்குமார் சர்மாவுக்கும் அழைப்பு போயுள்ளது. திருமண நிகழ்வு எளிமையாக நடக்கவுள்ள தால் மிக நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு மட்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.




## உலக ஹொக்கி லீக்:
# அரையிறுதியில் ஜேர்மனியை வீழ்த்தியது ஆஸ்திரேலியா




உலக ஹொக்கி லீக் இறுதித் தொடரின் அரையிறுதிப் போட்டியில் ஜேர்மனியை 3:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ஆஸ்திரேலியா அணி வெற்றி பெற்றது.

ஹொக்கியில் சர்வதேச தரவரிசையில் முதல் 8 இடங்களில் உள்ள அணிகள் பங்கேற்கும் உலக ஹொக்கி லீக் இறுதித் தொடர் போட்டிகள் ஒடிசாவில் நடந்து வருகின்றன. நேற்று முன்தினம் இரண்டாவது அரையிறுதிப் போட்டி நடைபெற்றது. இரவு 7:30 மணிக்கு ஆரம்பமாகிய இப்போட்டியில் ஆஸ்திரேலியா - ஜேர்மனி அணிகள் மோதின.

இப்போட்டியில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறும் முனைப்புடன் இரு அணியினரும் விளையாடினர். ஆட்டம் தொடங்கியதில் இருந்து 40ஆவது நிமிடம் வரை இரு அணியினரும் எந்தக் கோலும் அடிக்கவில்லை. அதன்பின் இறுதி நேர ஆட்டத்தில் ஆஸ்திரேலிய வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினர்.

முதலாவதாக 42ஆவது நிமிடம் ஆஸ்திரேலியாவின் டைலன் வெதர்ஸ்பூன் கோல் அடித்தார். தொடர்ந்து 48ஆவது நிமிடத்தில் ஆஸ்திரேலியாவின் ஜெர்மி ஹைவார்ட் பெனால்டி வாய்ப்பில் கோல் அடித்தார். அதன்பின் கடைசி நிமிட ஆட்டத்தில் டாம் விக்கம் ஆஸ்திரேலிய அணிக்காக மூன்றாவது கோல் அடித்தார்.

இதன் மூலம் ஜேர்மனியை 3:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ஆஸ்திரேலியா அணி வெற்றி பெற்றது

## தர்மசாலா ஒருநாள் கிரிக்கெட்:
# இந்தியாவை 112 ஓட்டங்களால் சுருட்டி பழியைத் தீர்த்துக்கொண்டது இலங்கை

தர்மசாலா ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 112 ரன்களில் சுருண்டது. டோனியின் அரைசதத்தால் ஓரளவு கௌரவம் பெற்றது இந்திய அணி.

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் போட்டி தரம்சாலாவில் நடைபெற்றது விராட் கோஹ்லிக்கு ஓய்வு கொடுக்கப்பட்டதால் ரோகித் சர்மா கப்டனாக நியமிக்கப்பட்டார். நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி கப்டன் திசர பெரேரா களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

அதன்படி இந்தியாவின் தவான், ரோகித் சர்மா ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களம் இறங்கினார்கள். இலங்கையின் பந்து வீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் இந்தியா அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்தது. ரோகித் சர்மா 2 ஓட்டங்களுடனும், தவான் மற்றும் தினேஷ் கார்த்திக் ஆகியோர் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமலும், ஷ்ரேயஸ் அய்யர் 9 ஓட்டங்களுடனும், மனீஷ் பாண்டே 2 ஓட்டங்களுடனும், ஹர்திக் பண்டையா 10 ஓட்டங்களுடனும், புவனேஸ்வர் குமார் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமலும் ஆட்டமிழக்க இந்தியா 29ஓட்டங்கள் எடுப்பதற்குள் 7 விக்கெட்டுக்களை இழந்து திணறியது.

8ஆவது விக்கெட்டுக்கு டோனியுடன் குல்தீப் யாதவ் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி ஓரளவிற்குத் தாக்குப்பிடித்து விளையாடியது. அணியின் ஓட்ட எண்ணிக்கை 70 ஆக இருக்கும்போது குல்தீப் யாதவ் 19 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார்.




டோனியுடன் இணைந்து குல்தீப் யாதவ் 41 ஓட்டங்கள் சேர்த்தார். இது இந்தியாவிற்கு முக்கியமான ஓட்ட எண்ணிக்கையாக அமைந்தது.

அடுத்து வந்த பும்ராவை ஒருபக்கம் நிற்கவைத்து டோனி அதிரடியாக விளையாட ஆரம்பித்தார். இந்தியாவின் ஓட்ட எண்ணிக்கை 87 ஆக இருக்கும்போது பும்ரா ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் ஆட்டம் இழந்தார். அடுத்து சாஹல் களம் இறங்கினார்.

மறுமுனையில் விளையாடிய டோனி 78 பந்து




களைச் சந்தித்து 8 பவுண்டரி, ஒரு சிக்ஸருடன் அரைசதம் அடித்தார். இந்தியா 36.3 ஓவரில் 100 ஓட்டங்களைத் தொட்டது. 39ஆவது ஓவரை பெரேரா வீசினார். இந்த ஓவரின் 2ஆவது பந்தை டோனி தூக்கியடித்தார். இது சிக்ஸர் என எதிர்பார்த்த நிலையில் பந்து இலங்கைக் களத்தடுப்பாளர் கையில் தஞ்சம் புக இந்தியா 112 ஓட்டங்களுடன் சுருண்டது. டோனி 65 ஓட்டங்கள் சேர்த்தார். சாஹல் ஓட்டம் ஏதும் எடுக்காமல் களத்தில் இருந்தார். இலங்கை அணி தரப்பில் லக்மல் 13 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டும், பிரதீப் 2 விக்கெட்டும் வீழ்த்தினார்கள்.

பின்னர் 113 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை துடுப்பாட்டத்தைத் தொடங்கியது.

இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் தனுஷ்க குணதிலக 1 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். இவரைத் தொடர்ந்து களம் இறங்கிய திரிமன்னே நம்பிக்கை கொடுப்பார் என எண்ணிய நிலையில் புவனேஷ்குமாரின் பந்து வீச்சைத் தாக்குப்பிடிக்காமல் ஓட்டங்கள் ஏதும் எடுக்காத நிலையில் பவிலியன் திரும்பினார்.

அவரைத் தொடர்ந்து களம் இறங்கிய மத்தியூஸ் நிதானமாகத் துடுப்பெடுத்தாட இலங்கை அணியின் வெற்றி பிரகாசிக்கத் தொடங்கியது. சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த தரங்க அரைச்சதம் பெற 1ஓட்டங்கள் இருந்த நிலையில் பண்டையா அவரை ஓய்வறை திருப்பினார்.

தொடர்ந்து மத்தியூஸுடன் இணைந்த டிக்வெல்ல பொறுமையாகத் துடுப்பெடுத்தாட இலங்கை 20.4 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 114 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுகளால் வெற்றியிலக்கை அடைந்தது.

ஆட்ட முடிவில், மத்தியூஸ் 42 பந்துகளை எதிர்கொண்டு 25 ஓட்டங்களையும் டிக்வெல்ல 24 பந்துகளை எதிர்கொண்டு 26 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

# இந்தியாவின் மோசமான 'சாதனை'




5 விக்கெட் இழப்பிற்கு மிகக் குறைவான ஓட்டங்கள் சேர்த்த பட்டியலில் இந்தியா முதலிடம் பிடித்துள்ளது.

இந்தியா வந்துள்ள இலங்கை கிரிக்கெட் அணி, 3 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 3 ரி-20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இதில் நடந்து முடிந்த 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை இந்திய அணி ஏற்கனவே 1:0 எனக் கைப்பற்றியது. இதையடுத்து, இலங்கைக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டி நேற்றுக் காலை தர்மசாலாவில் நடைபெற்றது. இந்த தொடரில் ஏற்கனவே இடம் பெற்றிருந்த கேதர் ஜாதவிற்கு பயிற்சியின் போது தொடை எலும்பில் காயம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகத் தொடர்ந்து சிகிச்சை பெற இருப்பதால், அவருக்குப் பதிலாகத் தமிழக வீரர் வாஷிங்டன் சுந்தர் இடம்பெற்றுள்ளார்.

இந்த நிலையில் நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி கப்டன் பெரோரா களத்தடுப்பைத் தேர்வு செய்தார். அதன்படி, தவான் மற்றும் சர்மா இருவரும் ஆட்டத்தைத் தொடங்கினர். ஆட்டத்தின் 2ஆவது ஓவரிலே இந்திய அணிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அதில், ஷிகர் தவான், ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல், டக் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

தவானைத் தொடர்ந்து இந்திய அணியின் கப்டன் சர்மா 2 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். இதற்கு அடுத்து வந்த தினேஷ் கார்த்திக்கும் டக் அவுட் முறையில் வெளியேற இந்திய அணி 8.5 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு வெறும் 8 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்தது.

இவருக்கு அடுத்து வந்த மணீஷ் பாண்டே (2 ஓட்டங்கள்), ஷ்ரேயாஸ் ஐயர் (9 ஓட்டங்கள்) ஆகியோர் அடுத்தடுத்து வெளியேற இந்திய அணி 13.2 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 16 ஓட்டங்கள் எடுத்து மிக குறைவான ஓட்டங்கள் சேர்த்த பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளது.

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அமைப்பினர் ஏற்பாடு செய்த இந்தப் பேரணி யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை ஆரம்பமானது.

கிளிநொச்சி, வரமராட்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மேற்கொண்டுள்ள தொடர்போராட்டம் 300 நாள்களை எட்டவுள்ள நிலையில் வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களையும் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இணைந்து இந்தப் போராட்டத்தில் தங்கள் உறவினர்களின் ஒளிப்படங்களைத் தாங்கியவாறு கலந்து கொண்டனர்

ஜனாதிபதியால் பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டபோதும் தற்போதுவரை இந்த விடயத்தில் எந்தவித முன்னேற்றமும் இடம்பெறவில்லை எனத் தெரிவித்த உறவினர்கள், நல்லாட்சி அரசு இதற்கு உரிய பதிலை வெகு விரைவில் தரவேண்டும் எனவும் கோரினர். இல்லையேல் தமது போராட்டத்தைச் சர்வதேசம் நோக்கித் தாம் விஸ்தரிக்கப் போவதாகவும் அவர்கள் கூறினர்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலக முன்றலில் நேற்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமான பேரணி அங்கிருந்து ஊர்வலமாக யாழ்.கண்டி வீதியூடாக கோவில் வீதியை அடைந்து பின்னர் யாழ். நாவலர் வீதியிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் நிறைவடைந்தது. அங்கு ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கான தங்கள் கோரிக்கைகள் அடங்கிய மனுவை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கையளித்தனர். (ஐ-7)

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பால சிறிசேனவைப் பொது வேட்பாளராக வெற்றி பெறச் செய்ய கடந்த அரசில் இருந்து விலகி வந்து, தற்போதைய அரசில் அமைச்சர்களாகப் பதவி வகிக்கும் சிலர் இந்த உடன்படிக்கையை நீடிப்பது தொடர்பான விடயத்தில் தலையீடுகளை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

எவ்வாறாயினும் தேசிய அரசில் இருந்து விலகவேண்டும் என சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்களில் பெரும்பாலானோர் கருதுவதுடன் எதிர்வரும் 31ஆம் திகதியுடன் உடன்படிக்கையை கைவிடவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து வருகின்றனர்.

சுதந்திரக் கட்சி அரசில் இருந்து விலகினால்,மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைகள் இடையில் நின்று விடும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான முரண்பாடுகள் அதிகரித்து மோதல் உருவாகினால், நிறைவேற்று அதிகாரம் மற்றும் நாடாளுமன்றம் செயற்படுத்தும் வேலைத்திட்டங்களை சரியாக முன்னெடுக்க முடியாத தடையேற்படும் எனவும் உடன்படிக்கை நீடிக்க விரும்பும் அமைச்சர்கள் கருதுகின்றனர்.

உத்தேச புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கவும் நாட்டின் அபிவிருத்திப் பணிகளைச் சரியான முறையில் முன்னெடுத்துச் செல்லவும் தேசிய அரசு மேலும் நீடிக்கவேண்டும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர். (ஐ)

## தீர்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மனித உரிமைகள் மற்றும் அரசமைப்புத் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலே இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அதிகாரப் பகிர்வானது அரசியல்வாதிகளுக்கானது என்றால், இலகுவாகவே நாங்கள் அரசுடன் சேர்ந்து அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டிருக்கலாம். ஆனால் நாங்கள் அவ்வாறு செய்யப்போவதில்லை.

அதற்குக் காரணம் அதிகாரங்கள் மக்களிடத்தில் இருக்க வேண்டும். மக்களுடைய பிரதிநிதிகள் ஆட்சி செய்யவேண்டும் என்பதனாலேயே நாங்கள் மக்களுக்கு அதிகாரங்கள் கிடைக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றோம்.

எனவே ஒழுங்கான முறையில் அரசமைப்புச் சட்டத்தின் மூலம் அதிகாரங்கள் பகிரப்படுகின்றவரை ஆட்சி அதிகாரங்களை மத்திய அரசுடன் நாங்கள் கையாளமாட்டோம் என்ற கொள்கையுடன் இருக்கின்றோம் – என்றார்.

அன்புக்கும் நட்புக்குமான வலையமைப்பின் தலைவர் ரவீந்திர டி சில்வா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மூவினத்தையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் இளைஞர், யுவதிகளால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் சுமந்திரன் பதிலளித்தார். (ஐ-100)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய கட்சிகளின் இணைப்பில் 'ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு' என்ற பெயரில் புதிய கூட்டணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

கொள்ளுப்பிட்டி – ரேணுகா ஹோட்டலில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது. அத்தோடு, புதிய கூட்டமைப்பின் கொள்கைப் பிரகடனமும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்தக் கூட்டமைப்பை உருவாக்கியதன் நோக்கம் மற்றும் எதிர்கால திட்டங்களை இரு கட்சிகளின் பிரதானிகளும் இதன்போது தெளிவுபடுத்தினர்.

புதிய கூட்டமைப்பின் தலைவராக, முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகர்களில் ஒருவரும், மூத்த அரசியல்வாதியும், முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகமுமான ஹசன் அலி நியமிக்கப்பட்டுள்ளார்.

நாட்டின் சமத்துவத்தை பேணும் வகையிலும், முஸ்லிம் சமூகத்தின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்கும் நோக்கிலுமே இந்தப் புதிய கூட்டமைப்பை உருவாக்கியுள்ளதாக அமைச்சர் ரிஷாத் பதியுதீனும், முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஹசன் அலியும் இந்த மாநாட்டில் தெரிவித்தனர்.

புதிய கூட்டமைப்பானது, எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் அனைத்துச் சபைகளிலும் மயில் சின்னத்தில் போட்டியிட முடிவு செய்துள்ளதாக அமைச்சர் ரிஷாத் குறிப்பிட்டார்.

அத்தோடு, தாம் தலைமை வகிக்கும் கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸானது, ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் பங்காளிக் கட்சியாக இருப்பதால் உள்ளூராட்சித் தேர்தலில் சில மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதோடு வேறு சில மாவட்டங்களில் தனித்துப் போட்டியிடுவது தொடர்பில் ஆலோசித்து வருவதாகவும் அவர் கூறினார். (முன்னர் வந்த செய்தி 13ஆம் பக்கத்தில்)(ஐ)

## 7கட்சிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகரசபைக்கும் கட்டுபணத்தைச் செலுத்தியுள்ளன.

மக்கள் விடுதலை முன்னணி சாவகச்சேரி, வலி.மேற்கு, நல்லூர் ஆகிய பிரதேச சபை களுக்கும், யாழ்.மாநகர சபைக்கும் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது.

சுயேச்சைக் குழுவொன்று வலிமேற்குப் பிரதேச சபைக்கு மாத்திரம் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது.

கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தமது கட்டுப்பணத்தை எதிர்வரும் 14ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை செலுத்த முடியும் எனவும், சாவகச்சேரி நகர சபைக்கான வேட்புமனுக்களை எதிர்வரும் 18ஆம் திகதியில் இருந்து 21ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை செலுத்த முடியும் எனவும் யாழ்.மாவட்ட செயலக தேர்தல் அலுவலகம் தெரிவித்தது. (ஐ)

## யாழ்ப்பாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் நேற்று நடைபெற்ற வருடாந்த விருந்துபசார விழாவிலும் இடமாற்றம் பெறும் உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பு விழாவிலும் அதிதியாகப் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நீதிபதிகள், சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் இணைந்த ஒன்றே நீதிமன்றக் குடும்பம். இந்த மூன்று தரப்பினரிடமும் ஒற்றுமை அவசியம். அதுவே எனது சேவையின் குறிக்கோளாகும்.

கிழக்கு மாகாண மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்பது எனது அவா. அதற்காக நான் யாழ்ப்பாணத்திலிருந்து விடைபெறும் காலம் நெருங்கி விட்டது. யாழ்ப்பாணத்துக்கு வந்த தன் நோக்கத்தை நிறைவேற்றி விட்டேன்.

அடுத்ததாக மட்டக்களப்புக்குச் செல்லவுள்ளேன். அந்த மாவட்ட மக்களுக்கு நான் சேவையாற்றவேண்டும் – என்றார்.(ஐ)

## 93 சபைகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்புமனுத் தாக்கல் முடிந்த பின்னர், தேர்தல் நடைபெறும் நாள் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளால் வெளியிடப்படும்.

வேட்புமனுத் தாக்கல் இடம்பெறும் காலகட்டத்தில் மாவட்டச் செயலகங்களில் பாதுகாப்பை அதிகரிக்குமாறு, தேர்தல்கள் செயலகம் பொலிஸ்மா அதிபரிடம் கோரியுள்ளது. (ஐ)

## உதயசூரியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு நாம் நிறுவன ரீதியாகச் செயற்படாவிட்டாலும் எமது ஆதரவை வழங்கியிருந்தோம். தேசியக் குரலானது நலிந்து போகக்கூடாது என்பதற்காக நாம் ஆதரவளித்திருந்தோம். ஆனால் மக்கள் ஆணைக்குப் புறம்பாக அவர்களது செயற்பாடுகள் காணப்பட்டன.

இந்த நிலையில் தற்போது புதிய கூட்டமைப்புக்கு நாம் ஆதரவு வழங்கி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுச் செயற்பட ஆரம்பித்துள்ளோம்.

நாம் கிழக்கு மாகாணத்திலும் வன்னியிலும் பலமாக உள்ளமையால் அங்கே எமது வேட்பாளர்கள் போட்டியிடுவர் – என்றார். (ஐ-7)

## நாட்டைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணி மற்றும் ஜனநாயகக் கட்சி ஆகியவற்றின் ஆதரவாளர்கள் நேற்று முன்தினம் இணைந்து கொண்டனர். விஜேயராமவில் மஹிந்தவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த நிகழ்வு நடந்தது.

இவர்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட மஹிந்த,

தாய்நாட்டை துண்டுதுண்டாக பிரிக்க முயற்சிக்கின்றனர். 30 ஆண்டுகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து துண்டு துண்டாக இருந்த நாட்டை ஒன்றிணைந்த பின்னர் அரசு மீண்டும் துண்டுதுண்டாகப் பிரித்து வழங்குவதற்குத் தயாராகின்றது. இதன் போது மக்களுக்கு உள்ள வேதனையை எங்களால் பார்க்க முடிகின்றது. எந்தவொரு பிரச்சினையையும் அரசு தீர்க்கவில்லை. நல்லிணக்கம் என்பது பகுதி பகுதியாகப் பிரித்து வேறுபடுத்துவது அல்ல. இலங்கையில் ஒரு பகுதியை வேறுபடுத்துவதால், அதிகாரத்தைக் கொடுப்பதால் நல்லிணக்கம் ஏற்படுமா? மேலும் பகை அதிகரிக்குமே தவிர குறையமாட்டாது. வாழ்க்கைச் செலவு குறைவடையுமா? பகுதி பகுதியாகப் பிரிப்பதால் அவர்களின் வேலைவாய்ப்பு பிரச்சினை தீருமா? வீட்டுப் பிரச்சினை தீருமா? காணிப் பிரச்சினை தீருமா? இதில் ஒன்று கூடத் தீர்க்கப்படாது.

உண்மையில் இந்த நாடு ஒன்றிணைக்கப்பட்ட நாடு. பாரிய அளவில் உயிர்த்தியாகம் செய்து ஒன்றிணைத்த நாடு இது. அதேபோன்று மறுபுறம் பார்த்தால் பல ஆண்டுகளாக யுத்தம் செய்தது ஏதற்காக? நாடு ஒன்றாக இருக்கவே யுத்தம் செய்தோம். வெறுமனே நாட்டு இளைஞர்களே உயிரிழந்தனர். சிங்கள இளைஞர்கள் தமிழ் இளைஞர்கள் உயிரிழந்தனர். இராணுவத்தில் சிங்களர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் இருந்தனர். மற்றைய தரப்பில் புலி உறுப்பினர்கள் உயிரிழந்தனர். நாட்டில் இருந்த அச்ச நிலைமையை இல்லாது செய்து, மக்களுக்கு வீதியில் செல்லக்கூடிய நிலைமையை உருவாக்கியுள்ளோம். இவ்வாறான நிலையில் மீண்டும் அவ்வாறான நிலைக்கு நாட்டைக் கொண்டு செல்வது ஸ்திரமற்ற நிலைமையை உருவாக்குவது மிகவும் தவறானது.

அரசுக்கு அதிகாரத்தைக் கொடுத்தது அதற்காக அல்ல. அரசமைப்பு தொடர்பில் அரசு எங்கும் குறிப்பிடவில்லை. ஜனாதிபதி முறைமையை மாற்றுவதாக மாத்திரமே உறுதி வழங்கினர். தேர்தலின்போது அது மாத்திரமே வாக்குறுதியாக வழங்கப்பட்டது. அதேபோன்று மத்திய வங்கியில் இடம்பெற்ற பாரிய கொள்ளை காரணமாகவே கடனைப் பெறமுடியாமல் இருக்கின்றது. வட்டிவீதங்கள் அதிகரித்துள்ளன. நாடு வீழ்ச்சிப் பாதையில் சென்றுள்ளது. அந்தக் கொள்ளையைச் செய்தவர்கள் நாம் கடனைப் பெற்றதாகக் கூறுகின்றனர். நாம் கடனை பெற்றதால் தான் இவ்வாறு நடந்தது எனக் கூறுகின்றனர். எனினும் இன்றைய பத்திரிகைகளைப் பார்த்தால் அவர்கள் மேலும் கடனைப் பெறுவதை பார்க்க முடிகின்றது. கடன் வாங்குவதில் ஒரு முடிவில்லை.

மத்திய வங்கி கொள்ளையின் பின்னணியில் யார் இருக்கின்றார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். ஆணைக் குழுவின் அறிக்கை 8 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும் எனக் கூறினார்கள். அதனையும் பிற்போட்டுள்ளார்கள். அந்த அறிக்கை தயாரித்து முடிந்துவிட்டதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. எமக்கு தெரியாது, ஆனால் அவ்வாறுதான் தகவல்கள் வருகின்றன. அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுமா என்பது தொடர்பில் 31 ஆம் திகதிவரை பார்த்துக்கொண்டிருக்கின்றோம். எவ்வாறாயினும் இந்த நிலைமைகள் குறித்து அறிந்துகொண்டிருக்க வேண்டும் – என்றார்.

பியகம பிரதேச சபையின் ஐக்கிய தேசிய கட்சி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஜனநாயக கட்சி ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் உறுப்பினர்களே இவ்வாறு மஹிந்தவுக்குத் தமது ஆதரவை வெளியிட்டுள்ளனர். (ஐ)

## இனங்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படும் கட்சிகளைத் தான் தனிப்பட்ட வகையில் எதிர்ப்பதாகவும் அவர் கூறினார்.

ஜிந்தோட்டைச் சம்பவத்தில் சில கட்சிகள் மக்கள் மத்தியில் போட்டோவுக்கு முகம்காட்டியமை ஏமாற்று நடவடிக்கை. இதன் பின்னர் இதுபோன்ற ஏமாற்று நடவடிக்கைக்கு இடமளிக்கப் போவதில்லை. எந்தசவாலுக்கும் முகம்கொடுக்க அரசு தயார் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ)

## கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஜனாதிபதிக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நியாயமான கருத்து முரண்பாடுகள் இருந்து வருகின்றன. தேசிய அரசில் இந்தக் கருத்து முரண்பாடானது உச்சக் கட்டத்தை அடைந்து வருகின்றது. தேர்தலுக்குப் பின்னர் தேசிய அரசில் உடைவு வந்தால் ஐக்கிய தேசியக் கட்சி தனித்து நின்று ஆட்சியமைக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

அவ்வாறு தனித்து ஆட்சியமைக்கும்போது அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவும் தேவை. அதற்குத் தாம் ஆதரவு அளிப்போம் எனக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனும் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது ஒருமித்து இருக்க வேண்டிய தேவையும் அவ்வாறு ஒருமித்து இருந்தாலே ரணிலுக்கு அது சாதகமாக இருக்கும் எனவும் அவர் எண்ணுகிறார்.

இவ்வாறான நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது புதிய அரசுக்கும் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியுள்ளது. அதேபோன்று வரவு – செலவுத் திட்டத்திற்கும் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியுள்ளது.

தமிழரசுக் கட்சி மீது விமர்சனங்கள் அதிகரித்துள்ள நிலையில் புதிய அரசு வரலாம் வராமல் போகலாம். ஆனால் அவ்வாறு புதிய அரசு வந்தால் அந்த அரசுக்கு ஆதரவு கொடுக்கும் போது பேச்சு மூலம் எதனைச் செய்வார்கள் என்ற தெளிவுபடுத்தலைச் செய்வது புத்திசாலித்தனம். ஆனால் இங்கு அவ்வாறு எதுவும் நடக்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்து ஆட்சியில் இருக்க வேண்டும் என்பதற்காக எதனையும் செய்யத்தயாராக இருக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காணாமற்போனோர் பிரச்சினை, அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான ஒரு முடிவைக் காணாது வெறுமனே மேலெழுந்தவாரியான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது– என்றார். (ஐ-7)

# கிடைக்கப்பெற்றுள்ள வாய்ப்பை சரியாகப் பயன்படுத்த வேண்டும்

வவுனியா, டிசெ. 11

கிடைக்கப்பெற்றுள்ள இந்த வாய்ப்பை எமது மக்கள் சாதகமாகப் பயன்படுத்தும் பட்சத்தில் அவர்களது வாழ்வில் நிச்சயம் நாம் மாற்றத்தைக் கொண்டு வருவோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தின் நான்கு உள்ளூராட்சி மன்றக் கட்சியின் வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலங்களில் உள்ளூராட்சி சபைகளை நாம் வென்றெடுத்த பிரதேசங்களில் உட்கட்டுமானங்கள் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்திப் பணிகளைச் செயற்படுத்திக் காட்டியுள்ளோம். அதை அந்தப்பகுதி மக்கள் இன்றும் நன்றியுணர்வுடன் நினைவு கூருகின்றார்கள்.

எமது கட்சி ஒரே கொள்கை வழிநின்று மக்களுக்கான சேவைகளை முன்னெடுப்பதில் ஒருபோதும் தயங்கியமை கிடையாது.

அச்சுறுத்தல்களுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுத்து எமது மக்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வுகளைக் காண்பதில் நாம் தொடர்ச்சியாக அயராது உழைத்து வருகின்றோம்.

அந்தவகையில், நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பது அருமையான சந்தர்ப்பமாக எமது மக்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த அரிய வாய்ப்பை மக்கள் சரியாக பயன்படுத்தி எமக்கு ஆதரவுப் பலத்தை தருவார்களேயானால் அதற்கூடாக இம்மாவட்டத்தில் பிரதேச சபைகளை வென்றெடுப்பதனூடாக கட்சியினூடான பணிகளையும் சேவைகளையும் முன்னெடுக்க நாம் தயாராக இருக்கின்றோம்.

அதற்குக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அனைவரும் ஒன்றிணைந்து வெற்றிக்காக உழைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் கட்சியின் தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரத்தினம், கட்சியின் வவுனியா மாவட்ட நிர்வாக செயலாளர் திலீபன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.


வவுனியாவில் நடந்த கலந்துரையாடலில் டக்ளஸ் எம்.பி.

# இலங்கையில் பெரிய மாற்றம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளார் ஜனாதிபதி மைத்திரி

## தந்தையைப் புகழ்கிறார் மகள் சத்துரிக்கா

இலங்கையில் பெரிய மாற்றம் ஒன்றை எனது தந்தையான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்படுத்தியுள்ளார் என அவரின் மகள் சத்துரிக்கா சிறிசேன தெரிவித்துள்ளார்.

சத்துரிக்கா சிறிசேனவால் எழுதப்பட்ட 'ஜனாதிபதி தந்தை' என்ற புத்தகத்தை பொலன்னறுவை மக்கள் மத்தியில் வெளியிடும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது.



நிகழ்வில் உரையாற்றிய சத்துரிக்கா சிறிசேன, தனது தந்தை இலங்கை சமூகத்தில் புதிய மாற்றம் ஒன்றை அறிமுகம் செய்த விசேட தலைவர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மக்களின் சிரேஷ்ட தலைவராக எனது தந்தை இருக்க வேண்டும் என வேண்டிக் கொள்கின்றேன் என சத்துரிக்கா மேலும் தெரிவித்துள்ளார்

# மின்சாரம் தாக்கி சிப்பாய் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 11

மின்சார விநியோகக் கட்ட மைப்பை திருத்தும் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவ சிப்பாயொருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

பனாகொடை இராணுவ முகாமில் கடமையாற்றும் சிப்பாயொருவரே நேற்றுமுன்னம் மாலை உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் கொழும்பு - பன்னிப்பிட்டிய, பலன்வத்தையைச் சேர்ந்த 28 வயது இராணுவ சிப்பாயே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், உயிரிழந்தவரின் சடலம் ஹோமாகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# வழிப்பறியில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்காக இலங்கை அகதி முகாம் இளைஞர்கள் கைது

சென்னை – புழல் பகுதியில் உள்ள இலங்கை அகதிகள் முகாமைச் சேர்ந்த இரு இளைஞர்கள் வழிப்பறியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை -புழல் பகுதியில் வழிப்பறியில் ஈடுபட்ட மூவரை பொது மக்கள் துரத்திச் சென்ற நிலையில், இலங்கை அகதிகள் முகாமைச் சேர்ந்த 32 வயதுடைய தீபகாந்தன் மற்றும் 23 வயதுடைய மைந்தன் என்போரை மடக்கிப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

கும்மிடிப்பூண்டியை அடுத்த சூரவாரிகண்டிகை பகுதியைச் சேர்ந்த கட்டடத் தொழிலாளியான நாகேஷ் என்பவர் வீதியில் நின்று கொண்டிருந்தார். இதன்போது அப்பகுதியில் வந்த மர்ம நபர்கள் மூன்று பேர் அவரை மிரட்டி தொலைபேசியைப் பறிக்க முயற்சித்துள்ளனர்.

இதையடுத்து நாகேஷ் சத்தம் போட்டதைத் தொடர்ந்து அந்த மர்ம நபர்கள் அந்த இடத்தை விட்டுத்தப்பிச் செல்ல முயற்சித்துள்ளனர். அவர்களைதுரத்திப்பிடிக்கும்போது ஒருவர் தப்பிச்சென்றுள்ளமையுடன், இருவர் பொதுமக்களிடம் சிக்கிக்கொண்டனர். சிக்கிக்கொண்ட இருவரையும் கும்மிடிப்பூண்டி சிப்காட் பொலிஸ் நிலையத்தில் பொதுமக்கள் ஒப்படைத்துள்ளனர். இவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளில் இருவரும், சென்னையை அடுத்த, புழல் பகுதியில் உள்ள இலங்கை அகதிகள் முகாமைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது. இவர்கள் மீது வழிப்பறி தொடர்பான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# முதிரை மரக்குற்றிகளை ஏற்றிச் சென்றவர் கைது

கொழும்பு, டிசெ. 11

பொலிஸாரின் திடீர் சுற்றிவளைப்பில் முதிரை மரக்குற்றிகளை ஏற்றிச்சென்ற நபரொருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் மடு, குஞ்சுக்குள காட்டுப் பகுதியிலிருந்து உழவு இயந்திரத்தில் சட்ட விரோதமாக முதிரை மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற போதே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், கைது செய்யப்பட்டவர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார் என மடு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கஞ்சா வைத்திருந்த எழுவர் நுவரெலிய பொலிஸாரால் கைது!

கொழும்பு, டிசெ.11

இலங்கையின் மத்திய மாகாணம் நுவரெலியா மாவட்டத்தில் இருவேறு இடங்களில் கஞ்சா வைத்திருந்த ஏழுபேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு எட்டுமணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஹட்டன் குற்றத்தடுப்பு விசேட பிரிவினரால் மோப்ப நாயின் உதவியுடன் மஸ்கெலியா பகுதியில் வைத்து 24500 (24.5 கிராம்) மில்லி கிராம் கஞ்சாவுடன் 4 பேரும் வட்டவளை பகுதியில் கேரளா கஞ்சா சிறிய பக்கற்றுக்கள் வைத்திருந்த 3 பேருமாக மொத்தம் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வட்டவளை மற்றும் நீர்கொழும்பு பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என்றும் இவர்களை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளனர் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அட்டன் கோட்டப் பொலிஸ் அதிகாரி புத்தி உடுகமசூரிய, கோட்டம் 1 உதவி பொலிஸ் அதிகாரி ரஞ்சித் தசநாயக்க மற்றும் கோட்டம் 2 உதவி பொலிஸ் அதிகாரி சமன் பெரேரா ஆகியோரின் ஆலோசனைக்கமையவும் அட்டன் பொலிஸ் நிலையத்தின் தலைமையக கடமைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜயரத்ன அவர்களின் வழிகாட்டலுக்கமையவும் நேற்றுமுன்தினம் இரவு 8மணியளவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



(க)

# நீதிபதி சிறிநிதி நந்தசேகரனின் சேவைக்கு நேற்றுக் கௌரவம்




சாவகச்சேரி,டிசெ.11

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திருமதி சிறிநிதி நந்தசேகரனுக்கு யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் நேற்றுக் கௌரவிப்பு வழங்கப்பட்டது.

பெரும் நெருக்கடியான காலப் பகுதியிலும் அதன் பின்னரும் யாழ்ப் பாணம் மேல்நீதிமன்ற நியாயாதிக்க வலயத்திலுள்ள அனைத்து நீதிமன்றங் களிலும் நீதிவானாகவும் மாவட்ட நீதிபதியாகவும் சேவையாற்றியமைப் பாராட்டியே அவருக்கு இந்தக் கௌரவிப்பு வழங்கப்பட்டது.

2018 ஜனவரி 2ஆம் திகதி முதல் வவுனியா மாவட்ட நீதிபதியாக சிறிநிதி நந்தசேகரன் மாற்றலாகிச் செல்கிறார்.


யாழ்ப்பாணம் மேல்நீதி மன்ற நீதிபதிமாணிக்கவாசகர் இளஞ்செழியன், யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் ஆகியோரின் தலைமையில் மேல்நீதிமன்றங்களின் உத்தியோகத்தர்களால் இந்தக் கௌரவிப்பு நிகழ்வு யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

நீதிபதி திருமதி சிறிநிதி நந்தசேகரனை யாழ்ப்பாணம் மேல்நீதி மன்றப் பதிவாளர் திருமதி மீரா வடிவேற்கரசன் மலர் மாலை, பொன்னாடை அணிவித்துக் கௌரவித்தார்.

யாழ்ப்பாணம் மேல்நீதி மன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், நீதிபதி சிறிநிதி நந்தசேகரனின் சேவை யைப் பாராட்டி கௌரவச் சின்னமும் மேல் நீதிமன்ற நீதிபதி இ. கண்ணன் வாழ்த்துப்பாவும் வழங்கினர்.

இந்த நிகழ்வில் யாழ்ப் பாணம் மேல் நீதிமன்றம், குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

இதேவேளை, இலங்கையில் மிக நெருக்கடியான மோதல் மிகு பிரதேசத்தில், அங்குள்ள எல்லா இனக் குழுமங்களையும் நீதியின் முன் சமமாக நடத்துவதில் ஒரு சட்டத்தரணியாகவும், நீதிபதியாகவும் பொறுப்புணர்வையும் துணிவையும் வெளிப்படுத்திய ஒரு முன்னுதாரணராக நீதிபதி திருமதி சிறிநிதி நந்தசேகரன் திகழ்கிறார் என அமெரிக்கா பாராட்டியிருந்தது. அதற்காக அவருக்கு 'அமெரிக்காவின் வீரப் பெண்' விருது 2009 மார்ச் 24ஆம் திகதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




# வட்டுக்கோட்டையிலிருந்து அரசியல் மாற்றம் ஆரம்பம்

## வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கஜேந்திரகுமார்





யாழ்ப்பாணம், டிசெ. 11

தமிழ்த் தேசியவாதத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் பிறந்த வட்டுக் கோட்டை மண் அதே உறுதியுடன் தொடர்ந்து தமிழ்த் தேசியத்துக்காகப் பயணிக்கவேண்டும் என அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ்க் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தேல்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 4 மணியளவில் தமிழ்க் காங்கிரசின் வட்டுக்கோட்டை அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கொள்கைகளைக் கைவிட்டு ஒற்றையாட்சித் தீர்வுக்கு இணங்கியிருக்கும்ஒருதருணத்தில் தாம் உள்ளூராட்சித் தேர்தலைச் சந்தித்திருக்கின்றோம்.

இது வெறும் உள்ளூராட்சித் தேர்தலல்ல. தாங்கள் கஷ்டப்பட்டு அரசுடன் பேசிக் கொண்டுவந்திருக்கின்ற அரசமைப்புக்கு இது ஒரு கருத்துக் கணிப்பு எனச் சுமந்திரன் பல இடங்களில் கூறியிருக்கின்றார். எங்களுக்குக் கொள்கைதான் முக்கியம். எங்கள் கொள்கையோடு உடன்படும் தரப்புக்களை இணைத்துச் செயறப்பட நாங்கள் தயாராகவே இருக்கின்றோம்.

எங்களைப் பொறுத்தவரை இந்த அரசியல் மாற்றம் வட்டுக்கோட்டையில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என நினைக்கின்றோம்.ஏனெனில்தமிழ் அரசியலின் திருப்புமுனையாக மிக முக்கியமான கட்டங்களில் வட்டுக் கோட்டை இருந்திருக்கிறது. வட்டுக்கோட்டை மக்கள் ஒரு கொள்கையுடன் மிகத் தீவிரமாக இருந்த மக்கள். இந்த மண்ணில்தான் தமிழ்த் தேசியவாதத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் பிறந்தன. அந்தக் கோட்பாடுகளை நாங்கள் கைவிட்டுவிடக்கூடாது. எல்லோரையும்விட அந்தக் கோட்பாடுகளை முன்கொண்டு செல்லவேண்டிய கடமையும் பொறுப்பும் இந்த மண்ணுக்கே இருக்கிறது. எனவே தான் இந்த உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பாளர்கள் அறிமுகக்கூட்டத்தை இந்த வட்டுக்கோட்டை மண்ணிலிருந்து தொடங்கியிருக்கின்றோம்.

எனவே இந்த மண் பிழையான தரப்புக்களின் கைகளில் சென்றுவிடக் கூடாது என்பதைக் கூறிக் கொள்கின்றோம். இந்தத் தேர்தல் பலருடைய கணக்குகளை மீறி ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என நம்புகின்றோம் – என்றார். (ஐ-7)

# பெண்களுக்கான பாதுகாப்பு கருத்தரங்கு முல்லையில்



உலக மனித உரிமைகள் தினமான நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண்களுக்கான பாதுகாப்பான சூழலை உருவாக்குவோம் என்ற தொனிப் பொருளில் யாழ் சமூக மேம்பாட்டு மையத்தினால் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது.

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் பால்நிலை வன்முறைக்கு எதிரான 16 நாள் செயற்பாடு நவம்பர் 25 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 10 ஆம் திகதி வரை நடைபெற்றுள்ளது.

உலகளாவிய ரீதியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை அடையாளம் காண்பதோடு பெண்களுக்கான சுதந்திரமான வன்முறையற்ற சூழல் உருவாக்கப்படவேண்டும் என்ற நோக்கோடு பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

நேற்று முற்பகல் 10 மணிக்குக் கரைதுறைப் பற்றுப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் பிரதம விருந்தினராக மேற்கு ஆபிரிக்கா நாடுகளின் ஐக்கிய நாடுகள் பிராந்திய அலுவலகத்தின் முகாமைத்துவ நிபுணர் வி.பிரதீபன், சிறப்புவிருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றச் சட்டத்தரணி சுபா விதுரன் ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். (ஐ)

# கூட்டமைப்பு உறுப்பினர் ஐ.தே.கவுடன் இணைவு



வவுனியா, டிசெ. 11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டுத்தவிசாளராக இருந்த ஒருவர் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டார்.

வவுனியா விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு இது தொடர்பான நிகழ்வு நடந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேச சபைத் தலைவராகஇருந்த பாலசுப்பிரமணியமும் அவரது ஆதரவாளர்களுமே இவ்வாறு இணைந்து கொண்டனர்.

போரால் பாதிக்கப்பட்ட தமது பிரதேசத்தைத் தான் தலைவராக இருந்த காலத்தில் அபிவிருத்தி செய்ய முடியவில்லை எனவும், அரசுடன் இணைந்து அபிவிருத்தியை முன்னெடுக்கவுள்ளதாகவும், ஐக்கிய தேசியக் கட்சி வவுனியா வடக்குப் பிரதேசசபையைக் கைப்பற்றும் எனவும் பாலசுப்பிரமணியம் இதன்போது தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் கருணாதாச, இணை ஒருங்கிணைப்பாளர் தம்பாப்பிள்ளை பிறமேந்திரராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ - 100)

# மாவட்ட முகவர்களை அறிவித்தது தமிழரசு

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் தமிழரசுக் கட்சி மாவட்ட ரீதியில் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களின் விவரங்களை, மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளது.

வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங் களுக்குமான அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களின் விவரங்களைத் தமிழரசுக் கட்சியின் செயலர் துரைராஜ சிங்கம் அந்தந்த மாவட்டத்தெரிவத்தாட்சிஅதிகாரிகளுக்குஅனுப்பியுள்ளார்.

இதன்படி, யாழ்ப்பாணம் – மாவை. சோ.சேனாதிராசா, கிளிநொச்சி – சி.சிறிதரன், மன்னார் – இ.சாள்ஸ் நிர்மலநாதன், முல்லைத்தீவு– சாந்தி சிறிஸ் காந்தராசா, வவுனியா – ப.சத்தியலிங்கம் ஆகி யோர் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# தம்பியின் கத்திவெட்டில் அண்ணன் தலையில் காயம்

கெற்பேலிப் பகுதியில் இடம்பெற்ற கத்தி வெட்டுச் சம்பவத்தில் இளைஞன் ஒருவன் தலையில் படுகாயமடைந்த நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

குடும்பத் தகராறு காரணமாக ஏற்பட்ட மோதலின் போதே தம்பி வெட்டியதில் அண்ணன் படுகாயமடைந்துள்ளார். அல்லாரை வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த 24 வயதான பொன்னையா நிமலன் என்ற இளைஞனே கத்திவெட்டுக்கு இலக்காகிச் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ -21)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.12.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.